பதிவு எண் 2041

KUDI ARASU.


தனிப்பிரதி விலை { உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா }

# குடி அரசு

| | | |
|---|---|---|
| உள்நாட்டு சந்தா வருஷம் ... ரூ 3—0 | வாரப்பதிப்பு. | வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12. |
| 6 மாத சந்தா ... ரூ 1-12 | ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி. | கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2 |
| வெளிநாட்டிற்கு ... ரூ 4—0 | | நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 4 | ஈரோடு, விபவ ஞூ ஆனி மீ 11உ. (24—6—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 9.


## தானியம் அரைக்கும் கை - யந்திரம். -



மாவு, கோதுமை, காப்பி முதலியன அரைக்கலாம்.

மணி 1க்கு ஆறு பட்டணம் படி அரைக்கக்கூடியது.

**யந்திரம் 1க்கு விலை ரூபாய் 67—8—0.**

இன்ஜினினால் ஓட்டப்படக்கூடிய 'பிரீமியர்' என்ற பிரசித்திபெற்ற அரைக்கும் யந்திரங்களும் சலிசாக கிடைக்கும்.

**மாசி அண்ட் கம்பெனி, Ltd.**

திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்

கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.





நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலநிறமுள்ள சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் என்க் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணா எஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

## டிடக்டாஸ்

அல்லது

## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்துகொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கின்ற ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் கூடி கருவி விலை ரூபா 2 தான்.

மலர் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றி கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மி. ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும், குறைந்த விலை 4—8—0 தபால் செலவு 0—6—0.



தி. பான்ஸி வாட்ச் அவுஸ்,

15 A-பீட், ஜி. டி. மதராஸ்

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொணடுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை வானமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உரவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த தேகாவஸ்தை நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை மூட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

# ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங் கொள்கின்றன. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ. 1-0-0 வெளி நாடுகளுககு முன்பணம் ரூ 1-4-0. மாதிரி காப்பி இனும்!

விலாசம்:— 'ஆனந்த விகடன்' ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# மூத்துமாமா.


நேயர்களே! இந்தக் கதையைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

## முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமன்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி
தபால் பெட்டி 119, மதராஸ்.

## 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிரதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரு சாயபு,
ஹெட்நர்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

# இந்து தர்மத்தின் தீன பாத்திரங்கள்.

## கைவல்யசாமியார் எழுதுவது

"குடி அரசு" இந்து தர்மத்தை அழிக்க வந்திருக்கிறதென்று பழி சுமத்துகிறார்கள். 'குடி அரசு' இந்து வேத சுருதிகளின் தர்மத்திற்குப் பொருந்தினலும் பாப்பார்களின் இந்து தர்ம இசைக்கும் அவர்கள் பழக்க வழக்கங்களுக்கும் காரிய லாபத்திற்கும் பொருந்தாமையால் பாப்பார்கள் குற்றம் காண்பதில் ஆச்சரியமில்லை. அவர்கள் சிநேகிதத்திற்கும் முகஸ்துதிக்கும் தயவிற்கும், அவர்கள் பின்னே மற்றவர்கள் போவது இனியும் தேசத்தை மூட நம்பிக்கையில் சேர்க்குமே ஒழிய தேசத்திற்கு நன்மையை உண்டு பண்ணாது. யார் எப்படிச் சொன்னலும் உலகம் பரந்தது. அதில் அறிவும் பரந்து கிடக்கிறது. கல்வியும் வியாபிக்கிறது. நம்மவர்களுக்குள் விசாரணையும் நுழைந்து கொண்டிருக்கிறது. இவையனைத்துமிருந்தாலும் எழுதுமை கொட்டிவைவோர் எப்பொழுதுமிருப்பார்கள்.

அறியாமையால் கட்டும், அறிவினல் விடுதலையும் கைகூடும் என்பதை நம் முன்னேர் அறிவார். தன்னை சர்வத்திலிருந்து பிரிவாகக்காணுதலும் உலகமும் தானும் ஒன்றெனக் காணுதலுமே உண்மையறிவு. இத்தனை பெரிய உண்மையைக்கண்டு பிடித்த பெரியவர்களைக் 'குடி அரசு' குற்றம் சொல்லாது. உண்மையும் சத்தியமுமான பெரியவர்களின் விதிகளையெல்லாம் மறைத்து உண்மைக்கும் பொய்க்கும் ஒப்பந்தம் உண்டாக்கி, பாகச்சுவர்போட்டு, கர்மமென்றும் ஆசாரமென்றும் அபிஷேகக்கிரிகைகளென்றும் சத்தியமாய் மனிதன் செய்ய வேண்டிய தர்மத்தில் குறுக்கிட்டு, தாழ்ந்தோர், நோயாளி, கல்வி, தொழில் முதலியவைகளில் செல்வவான்கள் சொல்லுவதையும் தடுத்து "தர்மமென்பது வேறு; தானமே முக்கியம். அதுவே மதவர்களுக்குத்திருப்தி. அதுதான் இந்து தர்ம சாஸ்திரத்தில் விசேடமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் பிராமணனுக்கே கொடுக்கவேண்டும். அதனல் எல்லாபோகங்களும் சொர்க்கமும் வந்து விடும்" என்று அங்கும் சொன்ன உண்மைப் பிராமணனையும் மறைத்து, கஞ்சாக் கடைப் பாப்பானிலிருந்து சங்கராச்சாரி மடத்து கொள்ளை கொள்ளும் பாப்பான் வரையிலும் தானத்திற்கு அதிகாரிகளென்று வந்து "அவன் தானம் செய்ததினல்தான் ஆண்குழந்தை பிறந்தது; இவன் தானம் செய்ததினல் தான் எந்த ஊர்வக்கீல்களும் என்ன கொடுத்தாலும் எந்த கேசுக்கும் வருகிறார்கள்; எவனும் அவனவன் சக்தியானுசாரம் செய்யவேண்டும், அவன் தானம் செய்யாததினல் தான் விஷ்ணுவே மோகினியாக வந்து முருந்தாசூரனுக்கச்சபிக்தார். இவன் தானம் பண்ணமல் பிராமணர்களை அவமதித்ததினல் இரணியசுவாகப் பிறந்தான். எவன் எங்களுக்குக்கொடுக்கவில்லையோ அவன் எல்லா பாக்கியமும் கெட்டு பிதிர்லோகத்திற்கே போகமாட்டான்" என்னும் கதைகளைச் சாஸ்திரமென்று பரப்பி, அதுவே இந்து தர்மமாகவிருப்பதையே 'குடி அரசு' ஒழிக்க வேண்டு மென்கிறது.

வேள்வியும், அதைச்செய்யும் பிராமணனும், அதை ஏற்றுக்கொள்ளும் தேவதையும் சந்தஸ் மந்திரங்களும் அதற்காகத் தானங்களும் தர்மசாஸ்திரமென்னும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டவையே. இந்து தர்மங்களில் முக்கியமானவை 'எவன் வேட்பித்தலாகிய மந்திரங்களில்இருடி, தேவதை, சந்தசு, பிராமணம், இவற்றைத் தெரிந்து ஒவ்வொரு மந்திரத்திலும் மேற்கொண்டு செல்லுகின்றானே அவன் தீர்க்காயுளையடைகிறான். புகழுடையவனுகிறான். சிறந்தோனுகின்றான்" என்று ஸ்மிருதிகள் சொல்லுவதால் வேள்வியும் தானமுமே இந்து தர்மத்தில் பிரதானம். இந்த வேள்வியும் தானமும் தர்ம சாஸ்த்திரப்பிரகாரம் நடக்கிறதா? அழிந்து ஒழுக்கமில்லாத பாப்பார்களுக்கே வழங்கப்படுகிறதா? என்பதை கவனித்துப் பாருங்கள்.

'வேட்பித்தலே பாவம்' என்பது பூர்வ சித்தாந்தம். யார் வேள்வி செய்விக்கிறானே எந்த வேள்விக் காரியத்தில் வேட்பித்தலை செயகின்றானே அவன் வேதங்களைப் பழிக்கின்றவனுகிறான். எந்த வேள்விக்காரியத்தினல் வேட்பித்தலைச் செய்கின்றானே அவன் காட்டிற்குச் சென்று பரிசுத்தமான இடத்தில் அந்த வேதத்தையே ஓதிக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியது. அவனுக்கு உணவை ஒழித்தலே தீக்ஷையாகும். அசைவற்றிருத்தலே "உபசதம்" என்னும் வேள்வி அங்கமாம். அவனது வாக்கே 'ஜுஹு'வென்னும் ஓமபாத்திரமாம். அவன் மனமே "உப்பிருது" என்னும் வேள்விக்கருவியாகிய பாத்திரமாம். அவனது மன ஊக்கமே "துருப" என்னும் நெய் வார்க்கும் அகப்பையாம். பிராணனே அவிசாம். சாமவேதமே "அத்வரியு" என்னும் இருத்துவிக்கு இங்ஙனம் கூறப்பட்ட பிரசித்தியையுடைய வேள்வி பிராணனே தக்ஷிணையாக உடையது" என்னும் வேள்வியின் தத்துவத்தின் சுருதி வாக்கியமும் இருந்தாலும், வேட்பித்தலும் தானம் வாங்குதலும் பழிக்கப்பட்டிருந்தாலும், வேத பாராயணமும் காயத்திரி ஜெபமும் செய்வது பிராயசித்த மென்று வேதத்தால் சொல்லப் பட்டிருக்கிறதென்று ஸ்மிருதியில் சொல்லப் பட்டிருக்கிறது. இவை ஒவ்வொரு யாகமுடிவிலும் தர்க்கம் பண்ணி முடிவடையாமல் பலவேறுபாடுடைய அபிப்பிராயங்கள் நிறைந்த சாஸ்திரங்களாக நிறைந்து கிடக்கின்றன. எந்தக் காரியத்திற்கும் பார்ப்பனர்கள் ஓமம் வளர்த்துவதே வேள்வி; அதற்காகக் கொடுக்கப்படுவதே தானம். சின்னதற்குச்சிறியதும் பெரியதற்குப்பெரிய அக்கினிகுண்டமுமிருக்கும். பிராயச்சித்தத்திற்கு இப்பொழுது பாப்பார்கள் மூக்கையும் தண்ணீரையும் தொடுவது போன்றதல்ல காயத்திரி. உண்டியை ஒழித்து முக்காலும் வேத முழுவதும் பாராயணம் செய்ய வேண்டியது. மூன்று பகலிலும் மூன்று இரவிலும் மூன்று பாகத்தோடு கூடின காயத்திரி மந்திரத்தை பிராணயாமத்தோடு அப்பியாசம் செய்து ஜெபிக்கவேண்டியது. அப்பொழுது சுத்தமடைகிறான். இனி தான பாத்திரவிதியை இந்து தருமமான பராச ஸ்மிருதியில் விதித்தவைகளைச் சொல்லுகிறேன்.

### தானவிதி

"நாடோறும் தானஞ் செய்ய வேண்டியது. அது தக்க பாத்திரத்தில் தானே செய்ய வேண்டும். நிமித்தமுண்டான போது விசேடமாகச் செய்ய வேண்டியது. இரப்பவனுலும் தானம் செய்யப்படும். தனது சக்திக்குத் தக்கபடி சிரத்தையோடு கொடுக்கவேண்டும். சற்பாத்திரமானவர்களைப் பூஜித்து தச்சாஸ்த்திற்குரிய பசு, பூமி, எள், பொன், நெய், ஆடை, தானியம், வெள்ளி, உப்பு, முதலியவற்றைக்கொடுக்கவேண்டும். தனக்கு நன்மை வேண்டுமென்று விரும்பின அறிவுடையோன் தகாதவனுக்கு ஒரு சிறிதும் கொடுக்கலாகாது."

### தானபாத்திரம் வருமாறு.

"கீழ் விழுதலினின்று தப்பிவிப்போன் யாரோ அவன் பாத்திர மென்னப்படுவான்" யாஞ்ஞவற்கியஸ்மிருதி "தானத்தைப் பெறுக் கொள்ளுந்தாம் கல்வி யொன்றினலே அமைவதல்ல. தவத்தாலுமன்று. பின் எதனல் எனில், யாரிடத்து நல்லொழுக்கமும் அக்கல்வியும் தவமும்கூடியிருக்கிறதோ அவனே தானம் பெறத்தக்க இடமாவான்" என்று கூறுகிறது.

இயமன் என்னும் இருடி "தவமுடையவன் புண்ணிய சீலமுடையவன், மனசாந்தியுடையவன், பொறுமையுடையோன், ஐம்பொறிகளை வென்றவன், மெய் கூறுவோன், பிறர் செய்த நன்றி மறவாதவன், வேதமுணர்ந்தவன், தருமநூலுணர்ந்தவன், பசுக்களைக் காப்பவன், இவ்வளவு குணமுடையவனுகஇருந்து, தானே கொடுப்பவன் யாரோ அப்படிப்பட்ட வேதியன் தானத்தை வாங்குவதற்கு தக்கவன்" என்றார்.

வசிஷ்டர் "வேதமுணர்ந்தவன் சிறிது தக்கோனெனக்கூறப்படும். தவமுடையோனும் சிறிது தக்கோனுவான். யார் வாயில் சூத்திர சம்பந்தமான அன்னம் விழுகின்றதில்லையோ அவன் பாத்திரமென்னும் தக்கோருக் கெல்லாம் சிறந்த தக்கோனும்" என்றார்.

இயமன் என்னும் இருடி "ஆன்மாக்களின் உற்பத்திநாசமும், போக்குவரவும், அறிவும், அறிவுடைமையும் யார் அறிந்திருக்கிறானே அந்தவேதியனே வேதத்தை உணர்ந்தவன்" என்றார்.

பராசர் "தானம் பெறத்தகாதவர்கள் வறியவனேயாயினும் பைடாலவிரதம் உடையவேதியனுக்கும், பகவிருத்தியுடையபாவிக்கும், வேதத்தையறியாதவனுக்கும், தருமத்தை யுணர்ந்தவன் தானத்தைக் கொடுக்கலாது. விதிப்படி தான் தேடிய பொன்னை இம்மூவருக்கும் கொடுத்தால் கொடுத்தவனுக்குக் கேடுண்டாகும் மறுமையிலும்ஒன்றும் கொடாதவனேயாவான்" என்கிறார்.

பைடால விரதமாவது "எவன் யாதேனுமொரு நிமித்தத்தை முன்னிட்டுக்கொண்டு ஒரு விரதத்தை அனுட்டிக்கிறானே அவன் விரதத்தால் தன் பாவத்தை ஒளித்துவைத்திருக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு ஒன்றும் கொடுக்கப்படாது" என்பதாம்.

பகவத்தியிலக்கணமாவது "கீழ் பார்வையையுடையவன், வஞ்சகன், தன் பயனைத் தேடிக்கொள்வதிலேயே கருத்துடையவன், அடக்கமுடையவனைப்போல பொய்யாக நடிப்பவன், என்ன இந்த பார்ப்பான் பகவிருத்தியுடையவனுவான்" என்பது.

சாதாபதஇருடி "தேவலனுக்குக் கொடுத்த தானம் நஷ்டத்தை யடையும்; வட்டியால் ஜீவிக்கிறவனுக்கு செய்த தானத்தால் உயர்ந்த நிலைமை கெட்டுவிடும்; வியாபாரம் செய்கிறவனுக்குக் கொடுத்தால் அது இம்மை, மறுமை இரண்டிற்கும் பயனைத்தாராது வீணகும், எந்த அந்தணன் பொருளை இச்சித்து மூன்று வருடம் அன்னியனுக்காக தேவர்களை பூசிக்கிறானே அவனுக்கு தேவலகனென்று பெயர். அவன் தேவகருமங்களிலும் பிதிர் கருமங்களிலும் தகாதவனென்று இகழப்பட்டான்" என்கிறார்.

### வீணய்விடும் தானமாவன.

"முதல், அன்னியர் வாசம் செய்யுமிடத்தில் கொடுத்த எல்லா தானமும், மேல் நிலைக்குச்சென்று நிலை தவறி கீழ் நிலைக்கு வந்தவனுக்கும், பிராமண ஒழுக்கம் கெட்டவனுக்கும் கொடுத்த தானமும், திருடன், வஞ்சகன், செய்நன்றி மறந்தவன், குருவுக்கு விருப்பம் செய்யாதவன், கிராமப்புரோகிதன், வேதத்தைக் கூலிக்குச் சொல்லுகிறவன், உபாத்தியாயர், பரிசாரகன், தானத்திற்கு வழி உண்டாக்கி அதற்கே காத்திருப்பவன், இவர்களுக்கு கொடுக்கும் தானமும்கெட்டு, கொடுத்தவனும்கெட்டு நரகத்தையுமடைவான்."

### சுற்றத்தினர்களுக்கு அளிக்கும் தானம்.

பாராசர் "தாய் தந்தையருக்கும், தமயன் தம்பியருக்கும், தமக்கை தங்கைகட்கும், தன் பெண்களுக்கும், மனைவிக்கும், புத்திரருக்கும் கொடுத்தவன் நிச்சையில்லாமலே, சுவர்க்கத்தை யடைவான்.

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

வைக்கம் வீரர் உயர் திரு

## ஈ. வெ. ராமசாமிநாயக்கரவர்களுக்கு

முத்துராமலிங்கபுரம் ஞானனந்த வாசகசாலையார்,
சுக்கிலநத்தம் சுயமரியாதைத் திருமண மகோத்சவ தினத்தில்
வாசித்தளித்த

## வரவேற்புப் பத்திரம்.

உலகெலாம் வணங்கும் உத்தமனெளியர்சம்
பொருட்டேழையரின் திருக்கோலம் புனைந்
திந்திய மக்களின் ஏற்றத் தாழ்வினைப்
போக்குவான் விரதம் பூண்டேதரித்திர
நாராயணன் திருத் தொண்டு நலம் புரி
சீரார் காந்தி யெனும் சேவடி சிரமிசைத்
தாங்கிச் சத்தியாக் கிரகம் துங்கு நாள்
முன்னணி நின்று நன்மைபல புரிந்தும்
உயர் குலத்தோர்புரி யுக்கிர பகறல்
நாயுங் கழுதையும் பேயுந்தடையறத்
திரிதரும் தெருக்களில் வருமவ்வுரிமையும்,
இல்லாவேழை மக்களின் பொல்லாத்
தடைதனைத்தவிர்ப்பான் வைக்கம் சென்று
முடிமன்னவர்க்கும் கொடியர் சூழ்ச்சிக்கும்
அஞ்சிடாததுமேலோர் ஆனந்தமாகச்
சத்தியாக்கிரகத் தமர் தொடங்கி
எளியவர்க்குரிமை அளிபுற வழங்கியும்
வைக்கம் வீரனென மிக்குயர் நாமம்
உலகம்புனைய நிலமிசை வளர்வோய்
ஒடுக்கப்பட்டோர் இடுக்கட்படுவோர்
தாழ்ந்தவர்கயலரா லாழ்ந்தவரெனவிவர்
தமக்குமக்கட் பதம் தருவான் வேண்டிச்
சாதிப் பேய் மதப் பேயொடு நெஞ்சமர்
தொடங்கிச் சுயமரி யாதை மந்திரத்தால்
வென்றெளியோர்க்கு நன்றி செய் நாயக
எல்லாவுயிர்க்கும் இரங்கி யுதவி செய்
பவரே மக்களில் பெரியோரா மென
ஒத்தநற் சுருதி யுத்தி அனுபவம்
அங்கைநெல்லிக்கனி ஆமெனக்காட்டியும்
அறிவுக்கண்ணிலா வறியரை மயக்கிச்
சாதிமதமதி காரம் செல்வம்
இவற்றுலெளியரைச் சவட்டி வாட்டிடும்
கொடியர் தமைச்சாமி குருக்களெஜமான்
முதலாளியென்ன மொழிய வீற்றிருந்து
பருத்திப் பொதிபோல் வயிற்றுத் தருத்தியை
வளர்த்துத்திரியும் இளக்கமில்கயவரை
விளக்கும் ஆற்றல் விளக்கிச் செருபால்
சொல்லம்புசொரிந்து துளைத்துத் தாழ்ந்தோர்
ஒடுக்கப் பட்டோர் நடுக்கப் பட்டோர்
தீண்டாதாரெனத் தீயரால் மெலிவோர்
முதலாமெளியரை அஞ்சலென் றேந்தி
எடுத்து மரியாதை கொடுத்துக் காத்தருள்
கருணை மழை பொழிமலர்க் கண்ணனே வருக!
ஞானமில் குருடராம் ஈனர் சுயநலம்
கருதிக்கடவுளின் புதல்வரை மக்களென்
றெண்ணுதவர்தமைக் கண்ணுறிற் பாவம்
தொட்டிடிற்பாவம் கிட்டிடிற்பாவம்
பேச்சொலிகேட்டிடிற் பெரும்பாவமெனக்
கட்டுப்பாடுகள் இட்டிருத்தலும்
பாம்பும் போல ஆம்பல [illegible]
புரிவது தவிர்ப்பான் திருவவதரித்துச்
சுயமரியாதை யைவிருதுநாட்டிய
தீர வீர கெம் பீரனே வருக!
திக்கெலாம்புகழும் வைக்கம் வீர
ராமனே வருக! பூமனே வருக!
ஏழையர் பொருட்டுடல் நீள்பொருளாவியைத்
தத்தம் செய்த சித்தனே வருக!
சாதிப்பூசலும் சமயப்பூசலும்
ஓய்ந்து சமத்துவம் வாய்ந்து மெய்த்தருமம்
ஓங்கித்தாழ்ந்தோர் தீங்கின்றி வாழவும்
பாபம் தேய்ந்து கோபம் மாய்ந்து
புண்ணியம் வளரவும் நண்ணிய மூர்த்தியாம்
எம்பெருமான் நீ இன்புறநெடுநாள்
வாழ்கெளியோரை ஆண்டருள்புரியவும்
எல்லாம் வல்ல இறைவன் திருவருள்
மொழியும் வண்ணம் தொழுகுதும் யாமே.

சுக்கிலநத்தம் }
28—5—28 }

முத்துராமலிங்கபுரம்
ஞானனந்தவாசகசாலையார்.


## நாடார் மகாஜன சங்கம்

## 12-வது மகாநாடு,

## அருப்புக்கோட்டை.

**1928-ஹு ஜூலை-மீ 4, 5, 6 தேதிகளுக்கு**
**விபவ-ஹு ஆனி-மீ 21, 22, 23-உகளில்**
**நடைபெறும்.**

குமாரமங்கலம் ஜமீன்தாரும், சென்னை கவர்ன்மெண்ட்
முதல் மந்திரியுமான கனம் டாக்டர் பி. சுப்பராயன்
M. A. B. C. L. L. L. D. அவர்கள்
மகாநாட்டைத் திறந்துவைப்பார்கள்.

பொறையார் வி. கனகசபை நாடார், பிரசிடெண்ட்.
ப. உ. ஆ சிதம்பர நாடார், உபசாரணைக்கமிட்டி சேர்மன்,
ஞ. ஆ. முத்து நாடார், ஜனரல் செக்ரட்டரி.


### 'குடி அரசு' 'திராவிடன்' பத்திரிகைகளுக்கு நன்கொடை.

சுக்கில நத்தத்தில் மே 28உ நடத்தப்பட்ட சுயமரியாதைத் திருமணங்களை முன்னிட்டு சுயமரியாதைக்குழைக்கும் "திராவிடன்" பத்திரிகைக்கு ரூபாய் 5-ம் "குடி அரசு" பத்திரிகைக்கு ரூபாய் 5-ம் திருவாளர் சுப்பா ரெட்டியாரவர்கள் நன்கொடையாக அளித்துள்ளார். ஷெ நன்கொடையை எமது மனமார்ந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

### 13 வது தமிழ்நாடு பார்க்கவகுல மகாநாடு

சேலத்தில் கூட்டுவதே நலம்.

கூட்டத்தை திருச்சியில் நடத்துவதாக அழைத்தும், வாக்களித்தும் வந்த திரு சுந்தர உடையார் இதுபோது வேலை மிகுதியாயிருப்பதை முன்னிட்டு இயலாதென்று கூறுகிறார். ஆதலால் சேலத்தில் கூட்டுவதை அவர் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொள்ளுவர். கும்பகோணத்தில் கூடும் மகாநாட்டில் காணப்பெற்ற நமது மாகாணக்காரியக் கமிட்டி பிரதிநிதித்துவத்துடனும், உழைப்பாளிகள் நிறைந்தாயும் நிலவப் பெருமையால் இதுகாறும் எத்தகைய வேலையும் செய்ய இயலாதொழிந்தது 13 வது மகாநாட்டில் அச்சங்கத்தைக் கலைத்து புதியதொரு வேலைசெய்யும் சங்கமும், ஆலோசனைக் கூறுவதற்குரிய கூட்டமும் கண்டு இடையருது தீவிரமாக வேலைசெய்யத் தொடங்குதல் இன்றியமையாதது. எனவே அனைவேதிப்பொழுது இருக்கின்ற அயர்ந்த நிலையைப் போக்கி நேரிய நெறியுணர்த்தி கூட்டத்தைத் திறம் பெற நடத்துவதற்குரிய ஆற்றல் நிறைந்த தலைவரை உபசரணைப்பஞ்சாயத்தார் தேர்ந்தெடுத்துக் கொண்டு, வேலையை விரைவில் தொடங்குவரென்று எதிர்பார்க்கிறேன். இதுவேயுமன்றி,

வாலிபர் மகாநாடு

வாலிபர் மகாநாட்டையும் சேர்த்துக்கூட்டி விடுதல் மிகுதியும் பயன்விளைவிக்கு மென்பதை மூகமன் சமூகத்தாருக்கும் வாலிபகுலத் தொண்டர்கட்கும் ஞாபகமூட்டுகிறேன்.

பே. வே. துரைசாமி,
காரியதரிசி.

### திருவண்ணாமலை தாலூக்கா போர்டு தேர்தல்.

இத்தாலூக்கா போர்டு தேர்தலில் திருவாளர் எம் பி. ரங்கசாமி ரெட்டியாரவர்கள் வெகுநாளைக்கு முன்பே தேர்ந்தெடுக்கப்பட்டும் அவரது நியமனம் சிலரது சூழ்ச்சியால் கெஜட்டில் இதுவரை பிரசுரிக்கப்படாமல் இருந்து இப்பொழுதுதான் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. என்றும் இவரது நிய மனத்தைக்குறித்து ஊர்வாசிகள் சந்தோஷப்படுகிறார்கள் என்றும் ஒரு நிருபர் எழுதுகிறார்.

### ஸ்ரீ ஞானியார் ஆசிரமம்.

மணப்பூண்டி, திருக்கோவலூர்.

ஆசிரமத்தலைவர் அவர்கள் உடல் நலங்குன்றிய தன் காரணமாக வைகாசி மாதம் 23-தேதி நடாத்துவதாக முடிவு செய்திருந்த திறப்பு விழா ஒத்திவைக்கப் பெற்றிருக்கிறது. மீண்டும் விழா நடைபெறும் தேதி, நிகழ்ச்சிக் குறிப்பு முதலியன பின்னர் வெளியிடப்பெறும்,

காரியஸ்தர்.

# இதிகாசங்கள்.

## இராமாயணம் — பாலகாண்டம்.

## 13 ம் கட்டுரை

(திரு. சந்திரசேகரப் பாவலர் எழுதுவது.)

திருமணமுடிந்த மறுநாள் விசுவாமித்திரன் விடைபெற்றுக் கொண்டு இமயமலையை யடைந்தான். தசரதன் அயோத்தியை நோக்கிப் புறப்பட்டான். சனகன் தனது குழந்தைகளுக்கு பல பொருள்கள் தந்து வழியனுப்பச் சிறிது தூரம் சென்று திரும்பினான். சிறிது தூரம் சென்றவுடன் தசரதனுக்கு முன்னால் விண்ணில் பறவைகள் பேரிரைச்சலிட்டன, மண்ணில் மிருகங்கள் வலம் சுற்றிப் போயின. மன்னன் அதுகண்டு திகைத்து நின்று வசிட்டனிடம் அதன் பலனை வினவினன். வசிட்டன் அவனை நோக்கி "பறவைகள் கூச்சலிடுவதால் நமக்கு ஓர் ஆபத்து விளையும் என்றும் மிருகங்கள் வலம் வருவதால் அது நீங்கி விடுமென்றும் அறியலாம்" என்று கூறினன். அப்போது மிகவும் கடுமையான தோற்றத்துடன் பரசுராமன் அங்கே தோன்றினான். முனிவர்களெல்லோரும் அவனைக்கண்டு அவன் முன்னரே அரசரைக் கொன்று சினம்தணிந்தபடியால் இப்போது கேடு செய்யான் என்று பேசிக்கொண்டு "அவனை வரவேற்று இன்சொற் கூறினர். பரசுராமனும் அவர்கள் பூசையை பெற்று தசரதனுடைய மகனை இராமனைப்பார்த்து "இராமா! நீ வில்லை முறித்த செய்தி கேட்டு உன் வலுவில் ஐயங்கொண்டு இங்கே வந்தேன். உனக்கு உண்மையான பலமிருந்தால் நான் கொண்டு வந்திருக்கும் இந்த வில்லை வளைத்து நாணேற்று; நாணேற்றி விட்டாயாயின் நான் உன்னோடு கைச்சண்டை செய்கிறேன்" என்று கூறினன்.

அப்போது தசரதன் மிக அஞ்சி "ஆயுதத்தைக் கையிலெடுப்பதில்லை யென்று இந்திரனிடம் வாக்குரைத்துப் பிராமணராயிருந்த நீர் இராமனைக் கொல்வீராகில் நாங்களெல்லோரும் இறந்து விடுவோம் காத்தருளவேண்டும்" என வேண்டினன். பரசுராமனோ அச்சொல்லை செவிகொள்ளாமலே இராமனை நோக்கி மேலும் சிவன் வில் திருமால் விற்களின் வரலாறு கூறி "நான் வைத்திருக்கும் இத்திருமால் வில்லை வளைத்து இந்த அம்பைத்தொடு, உன் வல்லமையை அறிந்து நான் உன்னோடு கைச்சண்டையிடுகிறேன்" என்று சொன்னான். இராமன் அவனை நோக்கி "உன் தந்தையை கார்த்தவீரியார்ச்சுனனென்னும் ஒருவன் கொல்ல அதற்காக நீ அரசர்களையெல்லாம் கருவறுத்தது நன்று. தந்தைக்கு கேடு செய்தோரை வேரொடழித்தல் பிள்ளைகளின் கடமையே. ஆனால் நீ என்னை இப்போது மிகவும் அவமரியாதையாகப் பேசினாய். அதனால் என்னுடைய வல்லமையைக் காட்டுகிறேன் பார்" என்று அவ்வில்லை வாங்கி வளைத்து அம்பைத் தொடுத்து கோபத்துடன் பின்னரும் "இந்த அம்பு உன் உயிரை வாங்கவல்லதாயிருந்தாலும் நீ பிராமணனாகவும் விசுவாமித்திரனுக்கு வேண்டியவனாகவும் இருந்ததினாலேயே உன்னை விட்டேன். ஆனால் இந்த அம்பு வீண்போகாது. அதனால் நீ நடப்பதற்கு ஏதுவான உன் காலிலுள்ள சக்தியையாவது அல்லது உன் தவவலியையாவது அடிக்கப் போகிறேன். உனக்கு எது சம்மதம்" என்று கேட்டான். பரசுராமனோ திருமால் சம்மந்தமான தன் வலிமையை இழந்து திகைத்து தன் காலை விடுத்துத் தவவலியை அழிக்கச் சொன்னான். இராமனும் அவ்வாறே செய்தான். பரசுராமன் மகேந்திர மலையை அடைந்தான். தசரதன் தானும் தன் பிள்ளைகளும் பிழைத்தது மறுபிறப்பென்று எண்ணிக்கொண்டு எல்லோருடனும் அயோத்தியை அடைந்தான். சில நாள் கழித்தபின் தசரதன் பரதனை அழைத்து "உன் மாமனான யுதாசித்து உன்னை அழைத்துப் போக இங்கே வந்திருக்கிறான்" என்று கூறினான். அது கேட்ட பரதன் தன்னோடு சத்துருக்கனை அழைத்துக்கொண்டு கேகய தேசத்தை அடைந்தான். பின்னர் இராமன் குடிகளுக்குவேண்டிய நன்மைகளைச்செய்து கொண்டு அவர்களுக்கு மிகவும் வேண்டியவனாக நடந்து அவர்களுடையபிரீதியைத்தேடிக்கொண்டிருந்தான். குடிகளும் இராமனிடம் மிகவும் பிரியத்தைப்பூண்டார்கள்.

இவ்வரலாற்றை ஆராய்வோம்.

மேலே கண்ட வரலாற்றில் சனகன் தசரதனுக்குப்பின் வந்து வழியனுப்பிய செய்தியைக் கம்பர் கூறவில்லை. பின் அரசன் கண்ட சகுனத்தைபபற்றி வால்மீகி கூறுகிறார் அவைகளில் பறவைகள் சத்தமிட்டது கேட்டினையும் மிருகங்கள் சுற்றிப்போனது நன்மையையும் தருவனவாம். இவ்வுண்மைக்கு மாறாகக் கம்பர் கூறுகிறார். அச்செய்யுள் வருமாறு:—

எகும்மள வையின் வந்தன வலமும் மயிலிடமும்
காகம முதலிய முந்திப தடை செய்வன கண்டான்
நாகம்மன னிடையிங்குள திடையூறென நடவான்
மாகம்மணி யணிதேரொடு நின்றான் நெறி வந்தான்.

இதனால் மயில் வலமும் காகம் முதலிய பறவைகள் இடமும் சென்று தடைசெய்தன. அதனால் இடையூறு வருமெனத் தசரதன் உணர்ந்தான் என்பதே அறியலாம். ஆகையினாலே வருமிடையூறு விலகுவதையுணர்த்தும் நற்சகுனமாக மிருகங்கள் வலம் சுற்றிப் போனதைக் கம்பர் கூறாது விடுத்தார். இடையூறு வருமென உணர்ந்தான் தசரதன் என்று கூறிய கம்பர் அடுத்த பாட்டாக

"நின்றே நெறி யுணர்வானொரு நினைவாளனை யழையா
நன்றோ பழுதுளதோநடு வுரை நீ நய மென்னக்
குன்றே புரைதோளானெதிர் புள்ளின்குறி கொள்வான்
இன்றே வருமிடையூறது நன்றாய்விடு மென்றான்"

"இன்றேவருமிடையூறது நன்றாய் விடுமென்றான்" என்று கூறியிருக்கிறார். தான் கண்ட சகுனமாகிய மயிலின் வலப்போக்கும், காகத்தின் இடப்போக்கும் தடைகளே அவை வரும் இடையூற்றை உணர்த்துவன என்று தீர்மானமாக உணர்ந்த தசரதன் புட்குறியாளனை அழைத்து தான் செய்த தீர்மானம் சரியா பிழையா என உணர்ந்துகொள்ளும்படி உள்ளதைக்கூறுமாறு கேட்கின்றனன். இதற்கு மறுமொழியா அப்புட்குறியாளன் 'இடையூறு வரும்ஆனால் அது நீங்கி விடும்' என்று புகன்றனன். இதில் கம்பர் முதற் பாட்டில் கூறியபடி மயில் வலமானதும், காகம் இடமானதும் தடையாயிருக்க வரும் இடையூறு நீங்கிவிடும் என்பதை புட்குறியாளன் எக்குறி கொண்டு இயம்பினனோ தெரியவில்லை. ஆதலின் 'அது நன்றாய் விடும்' என்று கூறுவதற்கு ஆதாரமில்லை. இதனால் வால்மீகி கூறுவதை நன்றாக உணராமலே கம்பர் கூறியவராவார்.

வால்மீகியோ பறவைகள் விண்ணில் கூச்சலிட்டன என்று கூறுகிறார். அதையே கம்பர் 'மயில் வலமும் காகம் இடமும் சென்று தடைசெய்தன' என்று கூறுகிறார். இவையிரண்டும் தீய சகுனங்களே என்பது தடைசெய்வன என்றதனாலும் இங்கு இடையூறனது என்றதனாலும் தெளிவாக அறியலாம். ஆதலின் இவைகளின் நீக்கமாக நன்மைக் குறிகுறியான சகுனமொன்றும் கம்பர் கூறாதுவிடுத்தமை தெளிவாம். மேலும் சகுனப்பலனைக் கூறியது வசிட்டமுனிவனென்று வால்மீகி கூற கம்பரோ புட்குறியாளனை அழைத்து வினவ அவன் கூறினனென்று கூறுகிறார். பரசுராமன் வந்தவுடனே அவனை முனிவர்கள் வரவேற்றதைக் கூறாதுவிடுத்ததோடு அவர்கள் நினைந்தவைகளைத் தசரதன் வாயிலான் உணர்த்துகிறார் கம்பர் மேலும். பரசுராமன் இராமனிடம் வில் வலியைத்தன் வில்லை வளைத்தலாலே சோதித்துப்பின் அவனோடு கைச்சண்டை யிடுவதாகக் கூறுவதைக் கம்பர் கூறாது விடுத்தார்.

கார்த்தவீரியார்ச்சுனனென்ற மன்னன் பரசுராமருடைய தந்தையைக் கொன்றான். அதற்காக பரசுராமன் இருபத்தொரு தலைமுறையாக அரசர்களைக் கருவறுத்தான். இது மிகவும் தீயதொருசெய்கை. இத்தீய செய்கையை அறிவும் ஒழுக்கமுமுடையோர் ஒவ்வொருவரும் வெறுப்பார் என்பது திண்ணம். இஃதிவ்வாறாக, இராமன், அச்செயல் தந்தையின் பொருட்டுக் கடமையாகச் செய்தமையின் அது மிக நன்றென்று உடன்பட்டதாக வால்மீகி கூறுகிறார். ஆனால் கம்பரோ அச்செயலில் இராமன் வெறுப்புக்காட்டியதாகவே கூறுகிறார். அச்செய்யுள் வருமாறு:—

"பூதலத்தரசையெல்லாம் பொன்றுவித்தனை யென்றாலும்
வேதவித்தாய மேலோன் மைந்தநீ விரதம் பூண்டாய்
ஆகலிற் கொல்லலானே தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற்கிலக்கமாவ தியம்புதி விரைவி னென்றான்"

இதன் கருத்து "நீ கொலைபாதகனாயினும் நான் உன்னைக் கொல்லப் போவதில்லை" யென்பது. பரசுராமனைக் கொல்லாதிருப்பதற்கு இராமன் கூறியதாகக் கம்பர் கூறும் காரணத்தில் "வேதவித்தாய மேலோன் மைந்தன் நீ" என்பது பொருந்தாது. விசுவாமித்திரனுக்கு நெருங்கிய உறவினன் பரசுராமன் ஆதலின் விசுவாமித்திரனுக்காக உன்னைக்கொல்லாது விடுகிறேனென்று இராமன் கூறியதாக வால்மீகி கூறியதே பொருத்தமானதாம். ஏனெனில் விசுவாமித்திரனுடைய மாணவனும் இராமன்.

"இந்த அம்புக்கு இலக்கமாவதியாது கூறு" என்றுமட்டும் இராமன் கேட்டதாகவும் அதற்கு மறுமொழியாக பரசுராமன் "என் தவவலியைக் கெடு" என்று புகன்றதாகவும் கம்பர் கூறுகிறார். இதனால் இராமனுடைய தீய குணம் புலனாகவில்லை. வால்மீகியோ இராமனைத் தீயவனாகக் காட்டுகிறார். எப்படியெனில் இராமன் பரசுராமனை நோக்கி "உன் காலை முறித்து உன்னை நொண்டியாக்கவா? அல்லது உன் தவ வலியைக் கெடுக்கவா" என்று கேட்டனனும். இதனால் இராமன் எவ்வளவு தீய மனதுடையவனென்பது புலனாகிறது. இவனைத் தெய்வம்போல் கூறி மயக்குமாறு இவனுடைய தீய செயல்களையெல்லாம் கம்பர் மறைத்தார்.

பரதனுடைய தாய் மாமனான யுதாசித்து மிதிலையிலேயே வந்து சேர்ந்தமையை வால்மீகி கூறுகிறார். அதைக்கம்பர் கூறுகின்றிலர். மேலும் "உன் மாமா யுதாசித்து உன்னை அழைத்துப் போக வந்திருக்கிறான்" என்று பரதனிடம் தசரதன் கூறியதாக வால்மீகி கூற இவ்விவரத்தைக் கம்பர் கூறாது "உன் பாட்டன் பார்க்க விரும்புகிறான், அதனால் நீ கேகயம் போ" என்று தசரதன் கூறியதாகக் கூறுகிறார். கடைசியாக மட்டும் கம்பர் யுதாசித்தை பரதனுக்கு துணைசென்ற ஓர் தானைத்தலைவனைப்போல் மயங்கிக் காட்டுகிறார். அச்செய்யுள் வருவாறு:—

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# மதம்.

ஸ்ரீமதி தர்மு அம்மாள் எழுதியது.

இவ்வுலகில் சைவமென்றும், வைணவமென்றும் ஸ்மார்த்த மென்றும் மாத்துவ மென்றும் இன்னும் எண்ணிறந்த அநேக விதமான மதங்கள் கணக்கிலடங்காத ஆபாசங்களுடன் பழக்கத்தில் உலாவுகின்றன. ஒவ்வொன்றுக்கும் ஜாதை அனுஷ்டானங்கள் வெவ்வேறு விதமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை முதலில் ஏற்படுத்தியவர்கள் சுயநலத்தையே பிரதானமாக நினைத்து எழுதியிருக்கிறார்களே யல்லாமல் நடுநிலைமையிலிருந்து ஒரு மதத்தையாவது சிருஷ்டித்தார்களென்று நினைக்க இடமேயில்லை. அவரவர்களின் நலத்தையே உத்தேசித்து எழுதியிருப்பதால்ஒன்றுக்கொன்று முரண்பாடாகவே சொல்லியிருக்கிறார்கள்.

இந்துமதத்தில் சொல்லியபடி ஆதியில் பசு,பதி, பாசம் என மூன்று இருந்ததாகவும், பசுவாகிய ஆத்மகோடிகள் பாசத்தால் கட்டப்பட்டு ஊழிகாலமாக இருந்ததாகவும், பதியாகியகடவுள் தம் கிருபாகோக்கத்தால், கட்டப்பட்டுக்கிடந்த ஆத்மகோடிகளை ஆணாகவும் பெண்ணாகவும் சிருஷ்டித்து எறும்பு கடை யானை ஈறாக எண்ணிறந்த ஜீவராசிகளுடன் இவ்வுலகை உண்டாக்கினதாகத் தெரிகிறது. அதில் மானிட வகுப்பினருக்கு வேதம் என்று கூறப்பட்டஒரு சட்டத்தையும், கடவுளே எழுதி அதில் விதி விலக்குகளை சொல்லியிருப்பதாக மொழிகிறார்கள். அவ்விதம் கடவுளால் செய்யப்பட்ட வேதத்திற்கே மேற்கண்ட மதத்தினர்கள் தம் தம் மதத்திற்கிசைந்தவாறு உரை கூறுகின்றனர். உதாரணமாக வைணவ மதத்தினர் அவர்கள் அடையாளங்களாகிய திருமண், துளசி, மணி முதலானவைகளுக்கே பொருத்தமான அர்த்தம் புகலுகின்றனர். சைவமதத்தினரோ திருநீறு உருத்திராக்ஷம் முதலியவைகளுக்கே பொருந்துமென்று அபிப்பிராயப்படுகின்றனர். இவ்விதம் ஒவ்வொரு மதத்தினரும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வதா கடவுளின் எண்ணம். இது நிற்க,

மனோ வாக்குக்காயங்களுக்கு எட்டாதவர் கடவுள் என்று சொல்லிக்கொண்டு அதற்கு மாறாக பூஜை மூகத்தால் அவரை அடையக்கருதி பூஜை புரிந்து வருகின்றனர்.

உண்மையில் அவர்கள்புரியும் கொடுஞ்செயல்களுக்கு கணக்கேயில்லை. அநேக ஜனங்களை ஏமாற்றி அவர்கள் சொத்துக்களை எடுத்துக் கொண்டு இன்னம் எவ்வளவோ எழுத்தில் எழுதக் கூடாத எண்ணிறந்த மோசங்களை செய்து, தன்னை நம்பினவர்களை துரோகம் பண்ணி சாமியாடிகளும், பூசாரிகளும் அநேகர் எக்காலமும் பிழைத்து வருகின்றனர். தற்காலம் எவ்வளவோ நாகரீகமும், விசாரணையும், சாஸ்திர ஆராய்ச்சியுமுள்ள அநேகர் இருந்தும் இவ்வித மோசங்களை வெளியாக்க யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளாமல் இருந்து வருவது வியப்பே! முற்காலத்து அரசர்கள் மதவிரோதமான விஷயங்களை வெளியிடக்கூடாதென்றும் அதற்கெதிரியாய் நடப்பவர்களை தண்டனைக் குட்படுத்தியிருக்கிறதாகத்தெரிகிறது. பாண்டியராஜன் சமணர்களைக் கழுவேற்றிய படலமே போதுமான அத்தாட்சி. இவ்வித நிர்ப்பந்தத்தால் அவரவர்களுக்குத்தோன்றிய நூதன ஆராய்ச்சிகளை ரகசியமாய் எழுதி வைத்துப் போயினர். அவைகளில் சிலவற்றை ஆதாரமாய்க் கொண்டு பார்லிமெண்ட் சபை மெம்பரில் ஒருவராகிய ப்ராட்லா என்பவர் பத்திரிகை மூலமாய் வெளியிட்டனர். அது சுமார் நாற்பது வருஷத்திற்கு முன் வெளி வந்தும், மேற்படி விஷயங்களை பகிரங்கமாய் பிரசாரம் செய்யவும், பத்திரிகைகளில் எழுதவும் அக்காலமிருந்த நிலைமையில் முடியாதென்று தெரிந்து புத்திமான்கள் அநேகர் இருந்தும் ஒருவரும் வெளிவராமல் இருந்தனர். துணிந்து வெளிவந்திருந்தால் யூத பட்டணத்தில் ஏசுநாதர் சிலுவையில் அடிபட்டது போல் இவர்களும் பட நேர்ந்திருக்கு மென்பதில் ஐயமில்லை. இது நிற்க,

வேதாந்த சாஸ்திரப்பிரகாரம் விசாரணையால் அடைவதே ஞானம் என்று சொல்லியிருக்கின்றனர். உதாரணமாக ஞானவாசிட்டத்தில் "சிந்தனை விரிந்திடல் பந்தமாம் அது நீங்கிடில் முத்தியாம்" என்றிருக்கிறது. ஆன்றோர் வாக்கை கடைபிடித்து நடவாமல் விசாரணையென்பதையே துறந்து, மூடநம்பிக்கையில் ஈடுபட்டு பாடுபட்டால் பலன் தரக்கூடிய லௌகிக விவகாரங்களை விட்டு, அறியாமைக்கு ஆட்பட்டு, தெரியாமைக்கு தொண்டு புரிந்து, அழிந்து, அந்தகாரத்தை வர்த்தனம் செய்து நிற்பது அறிவாளிகளுக்கு அழகல்ல.

தற்கால நிலைமை எப்படியெனில் ஒரு மனிதன் ஏதோ ஒரு சில வேடங்களைத் தரித்து நம்மில் மூடபக்தி யுடையோனைப்பார்த்து "நேற்று சொப்பனத்தில் கடவுள் என்னை உங்களிடம் வரும்படி ஆக்ஞாபித்தார்; நான் வாசம் செய்வது காசி; உணவு முதலியவை இராமேஸ்வரம்" என்று சொன்னால் உடனே அம்மூடபக்தியினர் மேல் வேஷ்டியை இடுப்பில் கட்டி அவன்காலில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து நிற்பார்களே யல்லாது "காசிக்கும் இராமேஸ்வரத்திற்கும் பறக்கும்படியான சக்திவாய்ந்த நீர் தெருவிலிருந்து நம்ம வீடு வரையில் பறந்துவாரும் பார்க்கலாம்" என்று அறிவால் விசாரணை செய்யமாட்டார்கள். என் போலியவர்கள் விசாரித்தாலும் அது பாவமென்றே சொல்லுவார்கள். மேற்கண்ட மனிதனும் "என்னை பரிசோதிக்கிறாயோ" என்று கோபித்துக்கொள்வானேயல்லாது அவர்கள் கேட்பதில் நியாயமிருக்கிறதென்று நினைத்து சாந்தமாய் பதில் கூறமாட்டான். இவ்வித துராத்மாக்களிடம் கடவுள் அடைக்கலம் புகுந்திருப்பதாக நினைத்து அவர்களுக்கு வந்தனை வழிபாடுகள் செய்பவர்களுடைய மனப்பான்மையை யாதென நினைப்பது.

இருட்டறையை ஆராய்ந்து பாராமல் அவ்விடம் யாரோஇருப்பதாகஎண்ணி "ஐயா, வந்தனம்" என்றால், அங்கிருந்து மறுமொழி எவ்விதம் வரும்? எதையும் ஆராய்ந்து பார்த்தபிறகே கண்டதைப்பற்றி, காணாததை கைவிட்டு, அரிப்புக்காரனைப்போல் உண்மையை கண்டுபிடிப்பதல்லவா நமது கொள்கையாய் இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் இவ்வித மோசத்தில் ஈடுபட்டு எண்ணிக்கையற்ற பலவித துன்பங்களுக்காளாகி அவஸ்தைப்படுவதையும் பார்த்துக்கொண்டு மௌனமாயிருக்கலாமா?

"நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை" என்றபடி ஒவ்வொருவரும் நிதானித்துப் பார்த்தால் அப்பொழுது உண்மை விளங்கும். அது எவ்விதமெனில், ஒருமனிதன் அயல்வீட்டிலிருக்கும் ஒரு வஸ்துவை அவ்வீட்டாரைக்காணாமல் எடுத்துவந்துவிட்டால் அவன் எவ்வளவு ஜாக்கிரதையாய் நடந்துகொண்ட போதிலும், மேற்கண்ட வீட்டுக்காரர்களைப் பார்க்கும்போதெல்லாம் களவு செய்தவன் மனதில் திகில் உண்டாகி அவன் நெஞ்சு துடிக்கும். அதுபோலவே குற்றம் செய்யாத ஒருவன்மேல் வேண்டுமென்றே ஒரு பழியைச் சுமத்தி அவனை அவமானப்படுத்த எண்ணினபோதிலும் அந்த மனிதன் "புகழும், பழியும் பெருக்கிற் பெருதும்" என்று நினைக்கிறது. "எனோ நம்மேல் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள்; அது காலக்கிரமத்தில் நீங்கி உண்மை வெளிவந்துவிடும்" என்ற நம்பிக்கையுடன் காலங்கழித்திருப்பான்.

## புரோகிதம் ஒழிந்த உத்தரகிரியை

நாளது ஜூன் 4-உ திங்கட்கிழமையன்று மதுரை பிரபல தேசபக்தரான ஸ்ரீமான் ச. சங்கிலியா பிள்ளை அவர்கள் இல்லக்கிழத்தியார் தேக வியோகமானதை முன்னிட்டு அன்னாருடைய அந்தியக்கிரியை நாளது ஜூன் ௴ 15உ வெள்ளிக்கிழமையன்று வைகையாற்றின் வடபாகம் தோப்பில் நடைபெற்றது. அவ்வமயம் மதுரை காங்கிரஸ்வாதிகளும் சுயமரியாதை சங்கத்தாரும் உற்றார் உறவின் முறையார்களும் திரளாக குழுமி இருந்தனர். மதுரையில் இம்மாதிரி நடந்தேறிய கிரியைகளில் இதுவே முதன்மை யானதாகும். எனெனில், தீவிர ஒத்துழையாதார் சோழவந்தான் ஸ்ரீமான் பட்டாபிராமய்யர் அவர்கள் சுருதி யுக்தி அநுபவ சித்தாந்தமாய் "மூடநம்பிக்கை"யைப்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதைக் கேட்ட அவிடத்தில் கூடியிருந்த ஜனங்கள் மூடநம்பிக்கையை ஒழித்த் கிரியைகளை செய்வதாய் உறுதிசெய்துகொண்டார்கள்.

பிறகு மேற்படி கிரியா கர்த்தாவான ஸ்ரீமான் ச பஞ்சரத்தினம் அவர்கள் விஜயம் செய்திருந்த ஜனங்களுடன் இல்லம் ஏகி ஓர் சமபந்தி போஜனம் நடத்தினர். சொக்கலிங்கக் கோனார்.

---

## பார்ப்பனீயம் ஒழிந்த கருமாதி.

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டை சேவல்பட்டி கிராமத்தில் எனது மைத்துனர் திரு. கோ. அழகர்சாமி ரெட்டியாருடைய சிறிய தகப்பனார் மகன் குமாரசாமி ரெட்டியார் காலஞ்சென்றதை முன்னிட்டு சென்ற வைகாசி மாதம் 22. தேதியன்று பார்ப்பனீயத்தை ஒழித்ததுடன் கருமாதி நடத்தி ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. ஏ. சு. ரெ. து. சுப்பா ரெட்டியார்.

---

ஆகையால் ஒவ்வொருமனிதரும் நெஞ்சறிந்த வஞ்சகம் செய்யாமல், சர்வ மதமும் ஒப்புக்கொள்ளும்படியான ஜீவகாருண்யத்தை கடைபிடித்து, நடத்தலே முறையாகும். அதைவிட்டு தீர்த்தாட்டனம், மூர்த்தி தரிசனம், கதாசிரவணம் முதலியவைகளைச் செய்வதுபோறதை மாற்றச்செய்யும் சூழ்ச்சிகளேயன்றி வேறல்ல என்பதே நமது கருத்து. அவர்கள் செய்யும் ஆகாத செய்கைகளையெல்லாம் கண்டு எழுத இடமில்லையென்று இத்துடன் விடுத்தனம்

தற்காலம் பொது ஜன முன்னேற்றத்தையே விரதமாகக்கொண்டு சுயநலமென்பதையே துறந்து தன் உடல் பொருளாவியை ஜன சமூகத்திற்கு அர்ப்பணம் செய்து பொது ஜனங்களிடையுள்ள மூட நம்பிக்கை யென்னும் மாசைப் போக்கி பிரகாசிக்கச் செய்துவரும் 'குடி அரசு' பத்திராதிபர் ஸ்ரீமான் நாயக்கரவர்கள் பிரயாசையால், ஒவ்வொருவரும் தம் மனதில் தோன்றிய அபிப்ராயத்தை தாராளமாய் வெளியிட சந்தர்ப்பம் நேர்ந்தது. இல்லையெனில் பழமை நம்மை விடாதென்பது திண்ணம். ஆனால் ஆதிகாலத்து தமிழ் நாயகமாகிய பவணந்தி "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" எனப்புகன்றனர். அப்படியிருந்தும் முன்னோர் வழக்கத்தை விடக்கூடாதென்று வெளியில் கேட்பவர்களுக்குச் சொல்லும் எண்ணிறந்த ஜனங்கள், தங்கள் சொந்த விஷயத்தில் அவசியம் ஏற்பட்டால் எவ்வித அக்கிரமச்செய்கைக்கும் உடன் படுவார்களென்று நான் சொல்லத்தேவையில்லை.

---

## பார்ப்பானுக்குக் கொடுத்தால்தான பரகதி அடைய முடியுமோ?

# இங்கர்சாலின் பொன்மொழிகள்.

திரு. ரா. சௌரிராஜன் மொழி பெயர்த்தது
(முன் தொடர்ச்சி)

ஆகலின் இவ் விஷயங்களை நாம் ஆலோசித்து ஒவ்வொரு மனிதனுக்கும் நியாயம் வழங்கப்படுகிறதா என்று நாம் பார்க்க வேண்டும். இந்த ஐக்கிய நாடுகளிலுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்காகவே நான் அனுதாபப்படுகிறேன். என்னை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். நான் அராஜகத்தைப் போற்றுபவனல்ல; அராஜகமானது கொடுங்கோன்மையின் மறுஉருவம். நான் சீர்திருத்தக் காரனல்ல; நான் பொதுவுடமைக் கட்சியையாவது ஸோஷலிசக் கட்சியையாவது சேர்ந்தவனல்ல. அரசாங்கத்தின் கொடுமைகளை நான் கண்டுவிட்டாலும் மனிதர்களுக்குள் வழங்கப்படும் நியாயத்தை நான் நம்புகின்றேன்.

பரிகாரம் என்னவென்று நாம் ஆலோசிக்கமுடியுமா? நான் அறிந்ததைச் சொல்வதாக எண்ணிக் கொள்ளாதீர்கள். இது ஒரு பெரிய விஷயமாயிருந்தாலும் நாம் ஆலோசித்துப் பார்க்கலாம். சமீபத்தில் நில சம்பந்தமாக நீங்கள் அதிகம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவைகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல என்னை அனுமதியுங்கள். பிறருக்குச் சொந்தமான ஒரு அங்குல நிலத்தைக்கூட நான் எடுத்துக் கொள்ளமாட்டேன். உபயோகப்படுத்தாத நிலத்தை ஒருவன் வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. ஒவ்வொருவரும் இதை அறிவார்கள். எனக்கு அதிக நிலங்களிருந்தால், எனக்கு உபயோகப் படக்கூடாத நிலங்களை நான் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. ஏன்? காற்றை சிலர்கள் அடைக்க முடிந்தால் மனிதர்கள் அடைத்துவிடுவார்கள். அப்பொழுது அமெரிக்காவில் காற்றடைக்கும் சங்கம் ஒன்று ஏற்படும். அதன் பிறகு மூச்சு விட வேண்டியவர்கள் பணம் கொடுத்து காற்றை வாங்க வேண்டும். இவைகளெல்லாம் சாத்தியமானால் நடக்குமென்பது உங்களுக்குத் தெரியாதா, நான் ஒருவரையும் தூற்றவில்லை. நான் உண்மையைச் சொல்லுகிறேன். உலகத்திலுள்ள நிலங்களெல்லாம் இயற்கை அன்னையின் புத்திரர்களுக்குச் சொந்தமானது. இயற்கை அன்னை பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் வரவேற்கிறது. நான் உங்களை எல்லாம் இங்கே அழைக்கிறேன். ஆனால் நீங்கள் இங்கே வந்த உடனே ஒருவன் நூறு நாற்காலிகளை தன்னுடையது என்று பிடித்துக் கொண்டால் நீங்களெல்லாம் நிற்கவேண்டியவர்களாகி விடுகிறீர்கள். இப்பொழுது நீங்கள் என்னையும் என்னுடைய அழைப்பையும் எவ்வாறு மதிப்பீர்கள். ஆகலின் உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் நிலங்கள் வைத்துக் கொள்ள உரிமையுண்டென்று நான் நினைக்கிறேன். கொஞ்சம் பணக்காரர்களும் கோடிக்கணக்கான ஏழைகளுமிருப்பது நமக்குப் பிடிக்கவில்லை. ஆதலால்தான் நான் இதைச் சொல்லுகின்றேன்.

இல்லத்தில் தான் நற்குணங்கள் வளரும், அந்த இல்லங்களெல்லாம் இப்பொழுது நற்குணத்துக்கு விரோதியாயிருக்கின்றன. ஒவ்வொரு வீடும் கடனில்லாமலும் வரியில்லாமலும் இருக்கவேண்டும். அப்பொழுது எல்லாருக்கும் ஒவ்வொரு வீடு இருக்கும். அப்பேர்ப்பட்ட காலத்தை நான் எதிர்பார்க்கிறேன், அப்பொழுது தேசபக்தர்கள் நிறைந்திருப்பார்கள். உபயோகப்படாததை ஒருவன் வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. பணக்காரர்களாக இருப்பதற்காக நான் பணக்காரர்களை தூஷிக்கவில்லை. அவர்களில் சிலரைப் பார்த்து நான் பரிதாபப் படுகிறேன். அன்பில்லாமல் இந்த பூலோகத்தை ஆள்வதைவிட அன்புடன் ஏழையாயிருப்பதையே நான் பெரிதும் விரும்புகின்றேன். கோடிக்கணக்கான பணத்தையுடைய தனவந்தர்கள் பட்டினி கிடக்கும் மனிதர்களைப் பார்த்துக் கொண்டு எவ்விதம் நாட்களைப் போக்குகிறார்களென்பது எனக்குத் தோன்றவில்லை. அதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. பணத்தில் அன்பைப் போக்கும்படியானதொரு வஸ்துவிருக்கிறது. ஒருவன் பணக்காரனானவுடன் அவனிடமிருக்கும் பணத்தைப் பறிப்பதற்காக அநேக மனிதர்கள் பிரயாசைப்படுகிறார்கள். ஆதலால் கொஞ்சகாலத்தில் அவன் ஜன சமூகத்தையே விரோதியாய்க் கருதுகிறான். நன்றாய் கவனியுங்கள். நான் இவர்களை தூஷிக்கவில்லை. பணக்காரர்களெல்லாம் இயற்கையாகவே உண்டாக்கப்பட்டார்களென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களை தூற்றாதேயுங்கள்; அந்த முறையை தூற்றுங்கள்.

பொது ஜனங்களின் நன்மைக்கென்று அரசாங்கத்தில் சில உரிமைகள் சிலருக்குக் கொடுக்கப் படுகின்றன. அந்த உரிமைகள் பொதுமக்களுக்கு நன்மை பயக்கவில்லையென்றால் அவைகள் அவர்களிடமிருந்து கண்டிப்புடன் பிடுங்கப்பட வேண்டும். ஏனெனில் ஒவ்வொன்றும் நீதிக்கு உட்பட்டிருக்க வேண்டும், பிறகு பரிகாரம் என்ன இருக்கிறது. முதலில் இந்த தேசத்தில் (அமெரிக்காவில்) பெரிய ஆயுதம் என்னவென்றால், பேலட் பேப்பர். அரசர்களும் ஆயிரம் பேர்களை அடக்கியாளும் கைகளும் எவ்விதம் மதிக்கப்படுகிறதோ அவ்விதமே ஓட்டுபோடும் கையும் மதிக்கப்படும். இந்த தேசத்தில் ஏழைகள் அநியாயமாகச் சட்டமாவது அவர்களை கொடுமைப்படுத்தினால் அது அவர்களுடைய குற்றம். அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு ஒரு கட்சியை பின்பற்றினார்கள். அவர்கள் பிறரால் ஏமாற்றப் பட்டார்கள், ஒரு மனிதன் ஒரு கட்சியின் பின்னால் ஒரு அங்குலங்கூட செல்லக்கூடாது. உலகத்திலுள்ளவர்களில் பாதிபேர் அந்த கட்சியை தழுவியிருக்கலாம். உலகத்திலுள்ள சிறந்த அறிவாளிகளெல்லாம் அந்தக் கட்சியில் இருக்கலாம்; உன் வழிக்கு கட்சி வராவிட்டால் அதன் வழி நீ செல்லாதே. யோக்கியமான மனிதன் மற்றொருவனைப் பின்பற்ற மாட்டான். தன் வழியே செல்லுவான். சுயேச்சைக் கட்சியாயிருக்கலாம்; குடி அரசு கட்சியாயிருக்கலாம்; அது உன் வழி வராவிட்டால் நீ அதைப் பின்பற்றாதே. பேலட் கடுதாசியே அதிக அதிகாரமுள்ளது. இச்சட்டம் தொழிலுக்கும் முதலுக்கும் உள்ள சச்சரவை தீர்க்க வேண்டும். ஆனால் நாகரீகத்திலிருந்தே நன்மை வரவேண்டுமென்று நான் எதிர் பார்க்கிறேன். நாகரீகமுள்ளவன் ஒரு பொருளை அதன் மதிப்புக்குக் குறைந்த பணத்தைக் கொடுத்து வாங்கமாட்டான். நாகரீகமுள்ளவன் ஒரு பொருளை அதன் மதிப்புக்கு உயர்ந்த பணத்துக்கு விற்கமாட்டான். நாகரீகமுடையவன் தான் ஏமாந்தாலும் பிறரை ஏமாற்றமாட்டான். இருந்தாலும் இந்த ஐக்கிய மாகாணத்தில் ஒவ்வொருவரும் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்க விரும்புகிறார்கள். இதுவே பாதகத்தை வளர்க்கிறது. இம்முறை முற்றிலும் தகர்க்கப்பட வேண்டும்.

உலகத்தில் பெரிய பணக்காரர்கள் வசிக்கிற லண்டன் மாநகருக்குச் செல்லுங்கள். அங்கே ஆஸ்பத்திரிகளிலும், சிறைச் சாலைகளிலும் எவ்வளவு பேர் இறந்து போகிறார்கள். இதுதான் சிறந்த நகரமா? நாகரீகம் சொல்லக்கூடிய செய்தி இதுதானா? அரண்மனைகளுக்கு பக்கத்தில் கோடிக் கணக்கான எளியவர்களைப் பாருங்கள். நாகரீகம் செய்யக்கூடியது இதுதானா? எளிய தாயானவள் கஷ்டப்பட்டும் தனது குழந்தைகளைக் காப்பாற்ற முடியாத நிலைமையிலிருக்கும் பொழுது நாம் நம்மை நாகரீகர்களென்று சொல்லிக்கொள்ள முடியுமா?

நான் இதை நாகரீகமென்று சொல்ல மாட்டேன்.


அடிமை வழக்கத்தைக் கைவிடுமுன் நாம் அநாகரீகர்களாகவும் ஞானமில்லாதவர்களாகவுமிருந்தோம், இப்பொழுது பழக்கத்தைத் தவிர மக்களை அடிமைப் படுத்தக் கூடியது ஒன்றுமில்லையென்றும், இதுவே உலகத்தில் உள்ள அரசாங்கங்களைக் காட்டிலும் சிறந்தது என்றும் சொல்லுகின்றோம். பணக்காரர்களுடைய குழந்தைகளைப் பாருங்கள்! அந்தோ! பணக்காரர்களாயிருப்பதற்காக என்ன தண்டனை! ஆகலால் என்ன நிகழ்ந்தாலும் இந்த அரசாங்கமும் இந்த முறையும் என்றும் இருக்க வேண்டுமென்று சொல்லுங்கள். சிலர் 'தொழிலாளர்களெல்லாம் நமக்கு ஆபத்தை விளைவிப்பவர்கள்' என்று சொல்லுகிறார்கள், நான் அதை மறுக்கிறேன். நாமெல்லாம் அவர்களுடைய அதிகாரத்தில் இருக்கிறோம். நம்முடைய மோட்டார் ஓடுவது அவர்களாலேயே. நம்முடைய உயிரே அவர்கள் கையில் இருக்கிறது. நமது வீடுகளில் அவர்களே வேலை செய்கிறார்கள். நாம் அவர்கள் தயவில் இருக்கிறோம். இருந்தாலும் பணக்காரர்களைப் போல் அவர்கள் அவ்வளவு குற்றம் செய்வதில்லை. அவர்களுக்காகப் பயந்து இதைச் சொல்லவில்லையென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அரசாங்கம் அவர்கள் கையில் இருக்கிறதென்று நான் பணக்காரர்களுக்கு பயப்படவில்லை. அவர்கள் பொது நன்மைக்கு விரோதிகளானால், பொது ஜனங்களெல்லாம் ஒன்று சேர்ந்து அவர்களைத் தகர்ப்பார்கள். கோபத்தாலல்ல, வெறுத்

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

மலாய் நாட்டில் கோலாலம்பூரில்

# 'இந்தியர் இலங்கையர் ஓட்டல், லிமிடெட்'

என்னும் சுயமரியாதை நிலயத் திறப்புவிழா.




படத்தில் உட்கார்ந்து இருப்போர் இடதுபக்கமிருந்து வலதுபக்கம்:—(1) முருகேசன், (2) பி. நாராயணசாமி நாயுடு, (3) நாராயணசாமி முதலியார், (4) எஸ் முத்து நாயுடு, (5) ஆர். வி. சுப்பையா பிள்ளை, (6) ஆர். டி. இராமசாமி பிள்ளை, (7) ஜே. பி. பீரிஸ், (8) டி. வி. கந்தசாமி பிள்ளை, (9) வி. ஆர். கே. ஆர். கிருப்பண செட்டியார், (10) கே. வி. எ. எல். முத்தையா செட்டியார், (11) வி. பி. இராஜகோபால் நாயுடு, (12) திண்டுக்கல் எம். வி. கே. தங்கமீரான் சாயபு, (13) சிங்கப்பூர் கோ. சாரங்கபாணி நாயுடு, (14) எம். எம். பி. எல். அழகப்ப செட்டியார்.

## காரமடை

## திரு கிஞ்சப்ப கவுண்டரின் ஒக்கிலிய மாணவ விடுதி

# திறப்பு விழா.

காரமடையில் புளியம்பட்டி திரு. கிஞ்சப்ப கவுண்டர் அவர்கள் ஒக்கிலிய மாணவர்கள் விடுதி ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று சிறிது காலமாய் முயற்சி எடுத்துக் கொண்டு வேண்டிய ஏற்பாடு செய்து முடிவாக இம்மாதம் 20-உ புதன்கிழமை ஷை விடுதியை திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களைக் கொண்டு அவ்விடுதியின் திறப்புவிழா செய்வதென்று நிச்சயித்து எல்லோருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அதன்படி திரு. நாயக்கரும், திருவாளர்கள் கண்ணப்பர், தண்டபாணிபிள்ளை, ரீளமேடு வேணுகோபால் பிள்ளை, கணேச முதலியார், சிவானந்த முதலியார், துரைசாமி பிள்ளை, திருப்பூர் கெ. வி. வெங்கடாசலம் பிள்ளை ஆகியவர்களும் மற்றும் பல கனவான்களும் காலை 10 மணிக்கு காரமடை ஸ்டேஷனில் வந்திறங்கினார்கள். திரு. நாயக்கர், கண்ணப்பர், தண்டபாணி பிள்ளை ஆகியவர்களை அவ்வூர்வாசிகளும் மற்றும் ஒக்கிலிக சமூகப் பெரியார்களும் பட்டக்காரர்களும் குதிரை சாரட்டு வண்டியில் சுமார் ஆயிரம் பேர்கள் புடைசூழ வாத்திய கோஷத்துடன் காரமடை தெருக்கள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஊர் முழுவதும் வாழைப்பு வளைவுகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்ததோடு ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் ஏராளமாக ஜே! சப்தம் முழங்கப் பின் தொடர்ந்து வந்தார்கள். ஊர்வலம், வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த விடுதி மண்டபம் வந்து சேர்ந்தவுடன் திரு. நாயக்கர் அவர்களுக்கு ஒக்கிலிய மகாஜன சங்கத்தின் சார்பாக ஓர் உபசாரப் பத்திரம் திருவாளர் ஒக்கிலிக சமூக பட்டக்காரர் அவர்களால் வாசித்து கொடுக்கப்பட்டு திரு. நாயக்கரை விடுதிச் சாலையை திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

திரு. நாயக்கர் அவர்கள் வரவேற்புக்கும் உபசாரப் பத்திரத்திற்கும் தக்கபடி மறுமொழி சொன்னதுடன் விடுதியின் அவசியத்தைப்பற்றியும் கல்வியால் ஏற்படும்நன்மையைப்பற்றியும் திரு. கிஞ்சப்பகவுண்டர் அவர்கள் இவ்விஷயத்தில் எடுத்துக்கொண்ட முயற்சியைப் பற்றியும் அவரது தர்ம சிந்தையைப் பற்றியும் புகழ்ந்து பேசி சரியாய் 12 மணிக்கு விடுதியைத் திறந்து வைத்தார். உடனே வந்திருந்த பெரியார்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. மாலை சரியாய் மூன்று மணிக்கு காரமடை ரங்கநாதர் ஆலயத்தின் முன் புறம் அமைக்கப்பட்டிருந்த பெரிய பந்தலில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. சுமார் 3000 மக்கள் விஜயம் செய்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் பெரிய பட்டக்காரர் ராமசாமி கவுண்டர், பட்டக்காரர் வீரப்ப கவுண்டர், கோயமுத்தூர் ராவ் பகதூர் ஸி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், எம். எல். ஸி. தர்மகர்த்தா எம்பிச்சி கவுண்டர், தர்மகர்த்தா ரங்கசாமி நாயுடு, தாளியூர் திப்பனை கவுண்டர், தீனம்பாளையம் வெள்ளியங்கிரி கவுண்டர், பாங்கி நஞ்சுண்ட கவுண்டர், கோயமுத்தூர் பீமய்ய செட்டியார், பாரிஸ்டர் பி. வி. சாமி, டிப்டிகலக்டர் லாசரஸ் பிள்ளை, வக்கீல் கிருஷ்ணய்யர், கொங்கர்பாளையம் ராஜாக் கவுண்டர், அட்டியண கவுண்டர், பெருமாள் கவுண்டர், அத்திப்பாளையம் ராமகிருஷ்ண நாயுடு, தாமோதரசாமி நாயுடு பி. எ, திம்மனூர் செட்டியார், அன்னூர் மணியகாரர், அய்யாமுத்து கவுண்டர், திருப்பூர் வெங்கடாசலம் பிள்ளை, துரைசாமி பிள்ளை, சிவானந்த முதலியார், சாமிநாத பிள்ளை, இஸ்லாம் பத்திராதிபர் ஜனாப் அப்துல் உதா சாயபு, முதலியவர்களும் மேட்டுப்பாளையத்திலிருந்து பல மகமதிய கனவான்களும், மற்றும் சுற்றுப் பக்கங்களிலிருந்து அநேக நாயுடுமார்களும், ஒக்கிலிய கவுண்டர்மார்களும், வேளாள கவுண்டர்மார்களும், பெண்களும், ஆதிதிராவிட மக்களும் ஆக ஏராளமாகக் கூடியிருந்தார்கள். பெரியப்பட்டக்காரர் திரு. ராமசாமி கவுண்டர் அக்கிராசனம் வகித்தார்.

திரு. கண்ணப்பர், வேணுகோபால் நாயுடு, நாயக்கர், தண்டபாணி பிள்ளை மற்றும் ஒரு சன்யாசி ஆகியோர்கள் 3 மணி முதல் இரவு 9 மணி வரையில் பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். முடிவாக பட்டக்காரர் திரு. வீரய்ய கவுண்டர் அவர்களால் உபன்யாசகருக்கும் அக்கிராசனருக்கும் வந்தனம் சொல்லப்பட்டு கூட்டம் முடிவுபெற்றது.

### பார்ப்பன விஷமம்.

திருவாளர்கள் நாயக்கர், கண்ணப்பர், தண்டபாணி ஆகியோர்கள் காரமடைக்கு வருவதை முன்னிட்டு அங்குள்ள பார்ப்பனர்கள் சுற்றுப்பக்கத்தார்களுக்கு ஒருவித கலவரத்தை உண்டாக்கி திறப்பு விழாவும் கூட்டமும் ஒழுங்காய் நடைபெறாமல் கலைத்து விட வேண்டும் என்கின்ற எண்ணத்துடன் கண்ணப்பர் தீண்டாதவர் என்றும் அவர் கோவிலுக்குள் சென்றுவிடுவார் என்றும் புரளி கட்டிவிட்டு கோவிலையும் அன்று முழுதும் பூட்டி விட்டார்கள். அன்று முழுதும் இரவு 11 மணி வரை காரமடை ரங்கனும் பூசையில்லாமலும் சோறு இல்லாமலும் பட்டினியாகவே இருக்க நேர்ந்தது. யார் சொல்லியும் கேட்காமல் மூடிவிட்டு போய் மறைந்து கொண்டார்கள். இந்தப் புரளியினாலேயே காரமடை சுமார் ஆயிரம் வீடுள்ளதாக இருந்தாலும் 3000 ஜனங்களுக்கு மேல் கூடிவிட்டார்கள். இதனால் பார்ப்பனர்களின் யோக்கியதை நன்றாய் விளங்க நேர்ந்தது.

மறுநாள் காலையில் திரு. கண்ணப்பர் அவர்கள் தொழிலாளர்கள் குறைகள் விஷயமாய் நிர்வாக மெம்பரைக் காணவும் திரு. நாயக்கர் 2 மாதம் வசிக்க ஒரு விடுதியைப் பார்க்கவும் நீலகிரி மலைக்குப் புறப்பட்டுப் போய் அங்கிருந்து பகல் 2 மணிக்கு புறப்பட்டு கோயமுத்தூர் வந்து காலை 6 மணிக்கு ஈரோடு சேர்ந்தார்கள். ஒரு நிருபர்.

## ஸ்ரீ அத்வைதா நந்தா வசகசாலை அறிக்கை

26—6—28 செவ்வாய்க்கிழமை இரவு 9 30 மணி முதல் ஸ்ரீ அத்வைதாநந்த வாசகசாலையின் விசேஷ பொதுக்கூட்டம் கொழும்பு கொள்ளுப்பட்டி கிறீன்பாத் பெண்கள் ஐக்கிய சங்க மண்டபத்தில் கனம் ராவ் பகதூர் எம் சி. ராஜா, எம். எல், எ, எம். ஆர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அப்பொழுது ஸ்ரீமத் ஸ்வாமி சகஜானந்தம் எம். எல். சி. அவர்களால் 'நமது வாலிபர் இயக்கம்' என்பதுபற்றி சொற்பெருக்கு நிகழ்த்தப்படும். சகோதரர்கள் தவறாது விஜயம் செய்யக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

ந. க. சுந்தரராஜ் கௌரவ காரியதரிசி.

## திண்டுக்கல் ஒடுக்கப்பட்டவர்கள் சங்கம்

நாளது 17 ம் தேதி பகல் 10 மணிக்கு ஷை சங்கம் திண்டுக்கல் ஆர். சி. சூசையப்பர் பாடசாலையில் கூடிற்று. கனம் வின்சென்ட் நாராயண ஐயர் அவர்கள் தலைமை வகித்தனர்.

காலம் சென்ற பாடிசன் அவர்கள் மரணத்துக்குப் பெரிதும் வருந்துவதாகவும் கனம் எஸ் எம் ஞானப்பிரகாசம், கனம் மகிமைதாஸ் முதலியவர்கள் ஒடுக்கப்பட்டகிறிஸ்தவர்களின் சார்பாக சைமன கமிஷனுக்குத்தயாரித்த மெமோராண்டத்தை ஆதரிக்கிறதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ——— சௌரிநாயகம்.

## புரோகிதத்தை அறவேஒழித்த திதி.


அம்பாசமுத்திரம் தாலூக்காவைச் சேர்ந்த ஆழ்வார்குறிச்சி கிராமத்திலுள்ள பிரபல மிராசுதாரரும் தாலூக்காபோர்டு அங்கத்தினருமாகிய திருவாளர் மேலைப்பண்ணை ஆரை இராமலிங்க முதலியார் அவர்கள் தமது பிதா மயிலப்ப முதலியார் அவர்களுக்கு வெகு காலமாய் பார்ப்பனரைக் கொண்டு நடத்திய வருஷாப்திகத்தை சுயமரியாதையை முன்னிட்டு, இவ்வருஷம் முதற்கொண்டு பார்ப்பனப் புரோகிதத்தை அறவே ஒழித்து, ஆனி மாதம் 28ந்தேதியன்று நடத்தி தமது உறவினருக்கும் மற்று ஏழை மக்களுக்கும் அன்னமளிப்பார்கள்.

எம். பி, ஆர். சுப்பைய்ப முதலியார்.

## பார்ப்பனீயமும் புரோகிதமும் ஒழிந்த திதி.

கொழும்பு சொர்ண விலாசத்திலுள்ள திருவாளர் இ. சங்கரகுமார பிள்ளையவர்களும் அவர்களின் உடன் பிறந்தார் மூவர்களும் காலஞ்சென்ற தங்கள் தந்தையாரின் ஆண்டு விழாவை முன்னிட்டு 18-6-28-ல் குருட்டு நம்பிக்கையான திதி என்னும் சடங்கையும் பார்ப்பனருக்குக் கொடுப்பதையும் முற்றிலும் ஒழித்து சுற்றத்தாருக்கும் நண்பர்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்திட்டு ஷை ஆண்டு விழாவைச்சிறப்பித்தார்கள்.

இதுபோலவே பழய சோனகத்தெரு 125 கதவிலக்கமுள்ள வீட்டிலுள்ள திருவாளர் ரெங்கநாதம் பிள்ளையவர்களும் தம் தந்தையாரின் ஆண்டு விழாவை 18-6-28-ல் நடத்தினார்கள். மு. சண்முகம்பிள்ளை.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு விபவ-ஞூ ஆனி மீ 11-உ

## திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்.

திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தமது 20-6-28உ 'நவசக்தி' பத்திரிகையில் 'திறந்த மடல்' என்னும் தலையங்கத்தின்கீழ் நமக்கு ஒருபகிரங்கக்கடிதம்எழுதியிருக்கிறார். அக்கடிதத்தில், நாம் சென்ற வாரக் 'குடி அரசு' பத்திரிகையில் எழுதிய விஷயங்களை நாம் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் 'நவசக்தி'யில்கண்ட மற்ற-நாம் கண்டிக்காமல்விட்ட-விஷயங்களைநாம்ஒப்புக்கொண்டதாகதாம்கொள்ளுவதாகவும் எழுதியிருக்கிறார். இதைப்போன்ற அறிவுடைமை பயித்தியக்காரஆஸ்பத்திரியிலும்கண்டுபிடிக்கமுடியாது என்றே சொல்லுவோம்.

மற்றவைகளைப்பற்றி நாம் பின்னர் எழுதுவோம் என்று குறிப்பிட்டது திரு முதலியாரின் கண்களில் படாமல் போனது ஏனோ அறியோம்.

மற்றும் நமது கட்டுரையை நான்கு பிரிவாக்கி

முதலாவதாக வசை மொழி என்றும் அதை இனிநாம்குறைத்துக்கொள்ளவேண்டுமென்றும் நமக்கு புத்திசொல்ல வருகிறார். இது அவருடைய அதிகப்பிரசங்கித்தனத்தையே காட்டுகின்றது. தற்காலபண்டித உலகத்தில் இது ஒரு அதிசயமல்ல. இதையே இவர் வசைவு என்றால் திரு. முதலியார் அவர்களின் யோக்கியதைக்கேற்ற மாதிரி அவர் போக்கை முழுதும் பின்பற்றியே எழுதியிருந்தால் அவர் அதற்கு என்ன பேர் இடுவாரோ நாம் அறியோம். நம்மை சிற்றினம் என்றுசொன்ன திருமுதலியாரின் இனத்தை விரிக்க நாம் துணிந்திருந்தால் அதை என்னவென்று சொல்லுவாரோ நாம் அறியோம். அன்றியும்பின்னும்ஒருகாலத்தில் திரு முதலியார் அவர்களுடன் பழமைபாராட்டநேரிடும் என்றே அவர் இனத்தை மனப்பூர்வமாக மூடி வைத்தோம். இதை திரு. முதலியார் ஒப்புக்கொள்ளாவிட்டால் நமக்கு கவலை இல்லை. சமயம் வரும்போது, நாம் எவ்வளவு மூடி வைத்தோம் என்பதை அவர் உணரக்கூடும் என்கின்ற தைரியம் நமக்குண்டு. ஆதலால் இனி மேலாவது திரு. முதலியாரவர்கள் நம் போன்றாருக்கு அறிவுறுத்தும் தன்மையை விட்டுதன்னையே அவர் திருத்திக்கொள்ள முயலவேண்டுமென்று அவருக்கு அறிவுறுத்த நமக்கு யோக்கியதை இல்லாவிட்டாலும் அந்நிலை ஏற்பட நாம் ஆசைப்பட உரிமை உண்டு என்று நினைக்கின்றோம்.

இரண்டாவதாக 'நவசக்தி'யின்மொழிகளில் சிலவற்றை நாம்தவறாகக்கொண்டதாகக்குறிப்பிட்டு தனதுகல்வித்திறன் முழுவதையும் அதற்காக செலவழித்திருக்கின்றார்.

இதைப்பற்றிய விசாரணையை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம். திரு முதலியாரவர்களின எழுத்தையோ மொழிகளையோ பிழைக்கொள்ளவில்லை என்று ஒரு மனிதன் திரு முதலியார் அவர்களிடம் பேர் வாங்க வேண்டுமானால் அது உலகத்தில் மக்கள் பிறவிக்கு ஆகக்கூடிய காரியமா என்பது நமக்கு பெரிய மயக்கமாகவே இருக்கின்றது. ஆழந்தெரியாமல் காலை விட்டுக்கொள்வதும் பிறகு மற்றவர்கள் மீது பிழைக்கொண்டதாக குறை கூறுவதும் அவரோடு கலந்திருந்தமுறையில்நாம் கண்டுபிடித்தவொன்றாகும்.

மூன்றாவதாக திரு முதலியார் பொறித்த சீர்திருத்தக் கட்டுரையை பொது நெறியற்றிஎழுதியதாகவேதிரும்பவும் எழுதி தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்கின்றார்.

திரு நாயக்கர் மீது போர்தொடுக்க ஆரம்பித்துவிட்டோம்உதவிக்குவா!வா! என்று கதவடைத்துவிட்டோம்காத்திருந்ததும் விலாசம் தெரிந்த பேர்வழிகளுக்கெல்லாம் சேதி அனுப்பினதும் திரு முதலியாரவர்களாலேயே சமீபகாலத்தில் மடையன், அயோக்கியன், தூர்த்தன், இழிமகன் என்றும் இன்னும் இன்னோரன்ன பலவாறாக சொல்லிக்கொண்டிருந்த நபர்களிடமெல்லாம் உயிர்துணை எதிர் பார்த்து இறைஞ்சியதும் 'அறப்போர்' தொடுக்க ஆண்டவன் அருளைத் துணைகொண்டதும் இவ்வளவும் பெற்றும் போதாமல் உயிர்விட துணிவு கொண்டதும் ஆகிய மற்ற காரியங்கள் எதற்காக யாரை உத்தேசித்து எது முதற்கொண்டு ஏற்பட்ட கெடுதிக்காக என்பதை கருணை கூர்ந்து திரு முதலியார் அவர்கள் திருக்கண்கொண்டு இப்போதாவது அருளுவாரா? என்று இறைஞ்சிவிட்டு அவ்விஷயத்தை தற்கால சாக்ஷியாக நிறுத்திவைக்கின்றோம்.

நான்காவது புராணங்களை ஒட்டியது என்று குறிப்பிட்டு புராணத்தைபற்றிய தமது அபிப்பிராயத்தை முருகன் என்னும் புத்தகத்தில் முன்னமேயே குறிப்பிட்டிருப்பதாகவும் எழுதி அதில் உள்ள விஷயத்தை எடுத்து நான்கு கலம்நீட்டி நீட்டியிருக்கிறார்.

அவற்றுள் நாம் இது சமயம் இரண்டு இடங்களை மாத்திரமே எடுத்தாளுவோம். அதாவது, ஒன்று கடவுளைப்பற்றியது; மற்றது புராணங்களைப் பற்றியது. அவற்றுள் "கடவுளைப்பற்றியதில்—சைவ, வைணவ, பௌத்த சமயவாதிகள் அறநெறி பிறழ்ந்து ஒருவரோடொருவர் போரிட்டு ஒருவரை ஒருவர் தூற்றி எழுதிய ஏட்டுச் சுவடிகள் பல......

இச்சமய வெறியர்கள் முருகன்—என்னும் தமிழ்ப் பெயரை விரும்பா தொழியினும் இயற்கை முதற்கு வேறு பெயர் சூட்டியாதல் வழிப்பட்டிருக்கலாம்? இயற்கையின் உட்பொருளை எப்பெயரால் வழுத்தினால் என்ன? இயற்கை கடவுள் முருகன் என்னும் பெயர் தாங்கினாலென்ன? அரி, அரன், அல்லா, ஜோஹோவா முதலிய எப்பெயரிட்டு அழைத்தாலென்ன"

என்று எழுதியிருக்கும் இடத்தை முதலாவதாக எடுத்துக் கொள்ளுகிறோம்.

இங்கு திரு முதலியாரவர்கள் தம்மை இயற்கை வாதியாகக் கொள்ளுகின்றார் என்று கொள்ளுகிறோம்.

அதாவது ஆங்கிலத்தில் நேச்சுரலிஸ்ட் (Naturalist) என்று சொல்லும் மதம்.

அதோடு இயற்கையை எந்த பெயரால் அழைத்தாலென்னஎன்றும் அதை முருகன் என்று அழைக்க ஒருப்படாதவர்கள் வேறு எப்பெயரால் வேண்டுமானாலும் அழைத்துக்கொள்ளுங்கள் என்றும் சொல்லியிருக்கிறார்.

அன்றியும் முருகனைப்பற்றி ஒவ்வொரு புராணத்தில் ஒவ்வொருவிதமாக சொல்லப்பட்டிருக்கின்றது என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

எனவே பல சமயக்காரர்கள், பல புராணக்காரர்கள், பல பேர்வழிகள் முருகனைப்பற்றி பலவிதமாக எழுதி யிருக்கிறார்கள் என்பதுபோலவே திரு. முதலியார் அவர்களும் தமது மதப்படி அல்லது தான் அறிந்தபடி ஒருவாறு முருகனைப்பற்றி திரு. முதலியார் அவர்களின் முருக புராணத்தில் எழுதி இருக்கிறார் என்றே வைத்துக்கொண்டு—இவைகளில் எந்த சமயக்காரரை, எந்த புராணத்தை, எந்த நபரை ஏற்றுக்கொள்வது என்பதைப்பற்றியும், எது சரி, எது தப்பு என்பதைப்பற்றியும், எவ்வாறு வழிபடுவது, எதற்காக வழிபடுவது என்பதைப் பற்றியும் மற்றொரு சமயம் ஆராய்வோம்.

இரண்டாவதாக புராணங்களைப்பற்றியெழுதியதில் "மூட்டை என்று வழங்கப்படும் சுவடிகளில் பேர்பெற்று விளங்குவன புராணங்கள். அவை ஆரிய உலகினின்றும் நம் தமிழ் நாட்டிற்றுள் புகுந்தவை. புராணங்கள் தமிழ் நாட்டின் முதல் நூல்கள் அல்ல.

புராணம் என்னும் சொல்லே தமிழ்ச்சொல்லன்று, என்று எழுதிவிட்டு

"பெரிய புராணம்" என்பது(மாத்திரம்) தமிழ் நாட்டில் தோன்றியதென்றும் அது பதினெண்புராணக் கூட்டத்தில் சேர்ந்ததல்லவென்றும் "ஒன்று அல்லது இரண்டு போக மீதி உள்ள புராணங்கள் எல்லாம் வடமொழியினின்று மொழி பெயர்த்தது" என்றும் எழுதிவிட்டு "சமய வெறியர்கள் பலர் பிறசமயக் கடவுளர் நிந்தனை கொண்டு போலிக் கதைகள் புனைந்து புராணம் பாடத் தொடங்கினார்கள். காமுகர் சிலரும் புராணம் பாடி இருக்கிறார்கள், இப்புராணங்களிலுள்ள வருணனைகள் இயற்கையை மறைப்பனவாயின; கதைகளோ

விலங்குகளும் வெறுக்கத்தக்கன; இப் போலிப் புராணங்களால் கடவுள் நெறிக்கும் ஒழுக்கங்களுக்கும் கேடு விளைந்தது………" என்றும் எழுதியிருக்கிறார்.

எனவே இவையிரண்டினுள்ளும் இயற்கைத் தோற்றந்தான் கடவுள் என்பதாக அவர் நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பதைப்பற்றியும் புராணங்கள் குப்பைகள் என்று எழுதியதைப்பற்றியும் அவைகள் ஆரியர்களால் புகுத்தப்பட்டன என்று எழுதியதைப்பற்றியும் அவைகள் பல சமய வெறியர்கள் பலரால் பாடப்பட்டவை என்று எழுதியது பற்றியும் அவைகளால் உலகில் மக்கள் ஒழுக்கங்கட்கு கேடு சூழ்ந்தது என்று எழுதியதைப் பற்றியும் நாம் திரு. முதலியார் அவர்களோடு போர் தொடுக்க கவலை கொள்ளவில்லை என்பதை திரு. முதலியாருக்கு வணக்கமாய் தெரிவித்து விடுகிறோம்.

இனி அவற்றுள் போருக்கு நிலைகளைப் எஞ்சி நிற்பது "பெரிய புராணமே"யாகும் "இது போன்ற ஒன்று அல்லது இரண்டு" என்பது எது என்பதையும் குறிப்பிட்டு அதை எதற்காக குறிப்பிட்டு மீத்துக் கொண்டிருக்கிறார்களென்பதையும் சொல்லியிருந்தால் நலமாயிருக்கும். ஆகிலும் அவை வெளியாகும்போது பார்த்துக்கொள்வோம்.

முதலாவதாக அப் "பெரிய புராணத்தை" திரு. முதலியார் என்னமாய் கருதிக் கொண்டிருக்கின்றார் என்பது நமக்கு சற்று புலனாகவேண்டியிருக்கின்றது. அது, திரு. முதலியார் கருதி இருக்கும் இயற்கை கடவுளால் பூலோகத்திற்கு அனுப்பப்பட்டது என்கின்றாரா?

அல்லது அதில் உள்ள விஷயங்கள் திரு. முதலியார் அவர்களின் இயற்கை கடவுளின் திருவிளையாடல்கள் என்கின்றாரா?

அல்லது அதை ஒரு வானசாஸ்திரம் என்கின்றாரா? அல்லது விஞ்ஞான சாஸ்திரம் என்கின்றாரா?

அல்லது உடற்கூறு சாஸ்திரம் என்கின்றாரா? உலகக்கூறு சாஸ்திரம் என்கின்றாரா?

அல்லது "வேதாந்த" சாஸ்திரம் என்கின்றாரா? சித்தாந்த சாஸ்திரம் என்கின்றாரா?

அல்லது அதை ஒரு தேச சரித்திரம் என்கிறாரா? அல்லது 'தெய்வ' சரித்திரம் என்கிறாரா.

அல்லது அதை இகத்திற்கு சாதனம் என்கிறாரா? 'பரத்திற்கு' சாதனம என்கிறாரா?

கற்புக்கு வழி என்கிறாரா? களவுக்கு வழி என்கிறாரா?

அரசியலுக்கு அறிவு என்கிறாரா? மத இயலுக்கு 'அறிவு' என்கிறாரா?

'கடவுள்' தன்மைக்கு நெறி என்கின்றாரா மனிதத் தன்மைக்கு நெறி என்கின்றாரா?

அறிவுக்கு ஆதாரம் என்கின்றாரா? ஆராய்ச்சிக்கு ஆதாரம என்கின்றாரா?

அல்லது அது திரு. முதலியாரின் இயற்கைக்'கடவுளை' உணர்த்த உதவுகின்றதா அன்றி செயற்கைக் 'கடவுளை' உணர்த்த உதவுகின்றதா? அன்றியும்,

முடிவாக அதிலுள்ளதெல்லாம் திரு. முதலியாரவர்கள் சத்தியமாய் நடந்தது என்பதாக ஒப்புக் கொள்ளுகின்றாரா? அல்லது ஒரு சமயத்தாரால் மக்கள் நன்மைக்காக என்று பெரியோர்களால் கற்பிக்கப்பட்ட கற்பனைக் கதைகள் என்று ஒப்புக் கொள்ளுகின்றாரா?

திரு. முதலியார் அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் அதை ஏற்றுக் கொள்ளுவதினாலேயே உலகில் உள்ள மற்ற மக்கள் எல்லோரும் அதை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும் என்கின்றாரா?

அன்றியும் யாராவது ஒருவன் அதை ஏற்றுக்கொள்ள ஒருப்படாவிட்டால் அதற்கு காரணம்கூட சொல்லக் கூடாதென்கின்றாரா?

இன்னொன்ற பிறவற்றிற்கு திரு. முதலியார் அவர்களின் திரு மனதிலுதித்த திருச் சமாதானம் என்ன வென்பதை திருவாய் மலர்ந்தருளுவாரா என்று விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

நிற்க திரு. முதலியார் அவர்கள் மேலே குறிப்பிட்ட 20-6-28உ தலையங்க முடிவில் நாயக்கரை முன்னிலைப்படுத்தி

"நண்பரே தங்கள் பொருட்டு எனது காலம் வீணே கழிகின்றது. தாங்களும் நானும் சில அறிஞர்கள் முன்னிலையில் சமய சீர்திருத்தப் பொருள்பற்றி வாதம்நிகழ்த்தி ஒரு முடிவிற்கு வருவது நலம். கல்வி கேள்வி ஆராய்ச்சிகளில் வல்ல சிலரிடமே சாலும். அன்னார் இன்னாரென நாமே தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். தங்கள் பதிலை விரைந்து எதிர் நோக்கும் திரு. கல்யாணசுந்தரன். (முதலியார்) ஆசிரியர் 'நவசக்தி' இராயபேட்டை, சென்னை" என்று எழுதி முடித்திருக்கிறார்.

திரு. முதலியார அவர்களுக்கு எதுமுதல் இந்த பஞ்சாயித்து ஞானம் உதயமாயிற்று என்று கேட்கின்றோம்.

"சிற்றினத்"திலிடத்தில் அவருக்கு பஞ்சாயத்து எதற்கு? ஆண்டவன் அருள் கொண்டு உயிருக்குத்துணிந்து போருக்குத் தொடங்கினவர்கள் போர்க்கோலத்தையும் தமது படை வீரர்களையும் களத்தே போட்டு வெறுங்கையோடு பஞ்சாயத்தில் புகுவதின் கருத்து யாது? என்பதும

இப்பஞ்சாயத்தில்புகுவோரின்யோக்கியதைதானென்ன? அதைத் தெரிந்துதான் எழுதிற்று. வடநாடு குசும்பிற்று; தமிழ்நாடு கதறிற்று என்று தன்னாலே கேற்றுவரா இழித்துரைக்கப்பட்ட அவைகளிடம் தஞ்சம் புகுவது என்பனவாகிய விஷயங்களும் நமக்கு புலனாகவில்லை.

அன்றியும் இவைகளிலிருந்து திரு. முதலியாரவர்களின் பஞ்சாயத்திற்கு காரணமாகிய சமய சீர்திருத்தம் இன்னது என்பதும் நமக்கு புலனாகவில்லை அவர் எச்'சமய' த்தவர் எச் சீர்திருத்தம் விரும்புகின்றவர் என்பவைகளும் நமக்கு விளங்கவில்லை.

இவைகள் ஒன்றும் அறியாமல் எங்ஙனே யாம பஞ்சாயத்தில் புகுவது என்பதும் நமக்கு விளங்க வில்லை.

முடிவாக திரு. முதலியாருக்கு நாம் ஒன்று சொல்ல விழைகின்றோம.

திரு. முதலியார் வாளே! நமது சீர்திருத்தமெல்லாம், போர் எல்லாம் நமது "பெரிய புராண"த்தையும் அது போன்றவைகளையும்"கடவுள்"களுக்காகவும் "கடவுள்" நெறிகளுக்காகவும் அந்நெறி உணர்த்திய பெரியாருக்காகவும ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் போன்றாரிடமும் நாஸ்திகம் என்பதாக ஒன்று இருப்பதாகக் கருதி அதைச் சிலர் பரப்புவதாகவும் கருதி அதை ஒழிக்க "ஆண்டவர்" அருள் கொண்டு உயிருக்கு துணிந்து கிளம்பிய வீரர்கள் போன்றாரிடமும்தான் பெரிதும் இருக்கின்றது. அதற்குத் தாங்கள் எப்பஞ்சாயத்தைக் குறிப்பிடுகின்றீர்கள் என்பதை தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தங்களது அருளும் வீரமும் பெற்ற நேரம் வீணாவதில் நான்பரிதாபப்படுகிறேன். ஆனாலும் வேறு வழியில்லாமல் தங்களது நேர்மை கொண்ட பதிலை எதிர்பார்க்கின்றேன். இப்படிக்கு தங்கள் உளத்தை, மதியைக் கொள்ளை கொண்ட

"சிற்றினம்."

குறிப்பு:— கடவுள், சமயம், சமயாச்சாரியார் என்று எழுதி வைத்திருந்த கட்டுரை இக் கட்டுரையில் நிறுத்தப்பட்டு விட்டது. அடுத்தவாரம் வெளிவரக்கூடும்.

---

## திருச்சியில் கோவிலதிகாரிகளின் பலாத்காரம்.

திருச்சி மலைக்கோட்டை கோவிலுக்கு சுவாமி தரிசனைக்கு திருவாளர்கள் ஜே. என். ராமநாதனும் மற்றும் அவர்களின் பல நண்பர்களும் சென்றதற்காக கோவில் அதிகாரிகள் காலிகளை வைத்து வழி மறித்து அடிக்கும்படி ஏற்பாடு செய்தது நன்றாக அடித்து துன்பப்படுத்திவிட்டதாக திரு ராமநாதன் அவர்களால் திருச்சி நியாயஸ்தலத்தில் கோவிலதிகாரிகளின் மீது பிராது தொடரப்பட்டிருக்கின்றது. இந்த பிராதுக்கு பார்ப்பனரல்லாத வக்கீல்கள் பீசு இல்லாமல் ஆஜராகி வழக்கை நடத்திக்கொடுக்கவேண்டும் என்றும் உத்திரவை மீறிநடப்பதற்காகவும் மேல்கண்ட விவகாரத்தை நடத்துவதற்காகவும் ஏற்படும் செலவுக்காக பொது மக்கள் தங்களால் கூடுமான பொருளுதவி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## திருச்சியில் 144.

திருச்சி மலைக்கோட்டை கோவிலுக்குள் பிரவேசிக்கக்கூடாது என்று திருவாளர்கள் ஜே. எஸ், கண்ணப்பர் தண்டபாணிபிள்ளை ஜே, என். ராமநாதன் ஆகியவர்களுக்கு அவ்வூர் மாஜிஸ்திரேட் திரு. சீனிவாசராவ் என்கின்ற ஒரு பார்ப்பனரால் 144ம் உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கின்றது. இவ்வுத்திரவு அக்கிரமமான உத்திரவானதால் அதை மீறி பிரவேசித்து சிறை புக தீர்மானித்து திருவாளர்கள் கண்ணப்பரும் தண்டபாணி பிள்ளையும முடிவு செய்து விட்டார்கள். இன்று அல்லது நாளை திருச்சிக்கு சென்று உத்திரவை மீறுவார்கள்.

### பின் வந்த தந்தி.

திரு கண்ணப்பரும் தண்டபாணியும் இன்றுகாலை 144ஐ மீறுவதற்கு இவ்விடமிருந்து திருச்சிக்கு பிரயாணமாயிருக்கிறார்கள் தங்களது மீறுதலால் எவ்வித கலகமும் பலாத்காரமும் நடை பெறாது என்று உறுதி கூறி திருச்சி பொது மக்கள் ஒற்றுமையாக

...வும் சமாதானமாகவும் இருப்பதாகவும் தங்களை அவசியம் மீற வேண்டும் என்பதாக மனப்பூர்வமாய் ஆமோதித்திருப்பதாகவும் திருச்சியில் இருந்து இன்று மாலை தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

## திரு நாயக்கர்.

திரு நாயக்கர் தமது உடல் நலத்தின் பொருட்டு ஓய்வுக்காக உதகமண்டலத்திற்கு போக நினைத்திருந்த எண்ணத்தை விட்டு விட்டார், அங்கு சீதோஷ்ண ஸ்திதி சரியாய் இல்லாததால் கொடைக்கானலுக்கே செல்வதாக முடிவு செய்து விட்டார். ஞாயிறு திங்கட்கிழமைகளில் அங்கு செல்வார். திரு நாயக்கருக்கு எழுதும் சொந்தக்கடிதங்களை 'பிளாக் பர்ன்' கொடைக்கானல்-என்கின்ற விலாசத்திற்கு எழுதவேண்டும் என தெரிவித்துக்கொள்ளுகின்றார்.

---

## முதல் மந்திரி

### டாக்டர் சுப்பராயன் அவர்களின் மறுப்பு.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் கொடுமுடியில் கூட்டப்பட்ட வேளாள வாலிபர் சங்க மகாநாட்டில் பேசியதில் "கோயமுத்தூர் ஜில்லாபோர்டில் 24 மெம்பர்கள் வேளாளர்களாக இருக்கும் ஒரு வேளாளர் பிரசிடெண்டாக இல்லாதது வேளாள சமூகத்திற்கு அவமானம்" என்று சொன்னதாக வெளியாயிருக்கும் சங்கதி உண்மையல்லவென்றும் தாம் அப்படிப் பேசவில்லை என்றும் தெரிவிப்பதோடு தாம் பேசினதின் கருத்து, தமக்குமேற்படி வாலிபர்மகாநாட்டில் வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்தில் குறிப்பிட்ட விஷயத்திற்கு பதில் சொல்லுகையில் "பிரசிடெண்டாக வருவதற்குள்ள சக்தி உங்களிடமே இருக்கின்றதே ஒழிய அதில் நான் செய்ய வேண்டிய வேலை ஒன்றும் இல்லை" என்கின்ற பொருள் படவே பேசினதாகவும் தாம் எப்போதும் ஜாதிப்பிரிவுகளுக்கு எதிரி என்றும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வகுப்பு பிரிவுகளுக்குள் தாம் பிரவேசிப்பதில்லை என்றும் தப்பாகவே தமது பிரசங்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தென்றும் தெரிவிக்கின்றார்.

எனவே யாரோ சுயநலமிகள் தங்கள் சுயநலத்திற்கு ஆக டாக்டர் சுப்பராயன் அவர்கள் வாக்கு மூலத்தை இம்மாதிரி பொது ஜனங்களும் வேளாள சமூகத்தில் பலரும் டாக்டர் சுப்பராயன் மீது தப்பு எண்ணம் கொள்ளும்படி தெரிவித்து விட்டதாக தெரிய வருகின்றது. எனவே இவ்வுண்மையை உணர்ந்த பின்பு பொது ஜனங்கள் இத்தப்பர்த்தத்தை நீக்கிக் கொள்வார்களாக.

---

## கடலூர் விருத்தாசலம் ரயில்பாதை திறப்பு.

இம்மாதம் 11௳ கடலூர் ஜில்லா போர்ட் பிரசிடெண்ட் ராவ்பகதூர் சீதாராம ரெட்டி எம். எல். சி. அவர்களால் கடலூர் விருத்தாசலம் ரயில்பாதை வழி திறக்கப்பட்டது.

## ஸைமன் கமிஷன் பஹிஷ்காரப் புரட்டு.

ஸைமன் கமிஷன் பஹிஷ்காரம் என்பது பார்ப்பனர்களின் சூழ்ச்சி என்றும் மற்றும் பல பார்ப்பன தாசர்களின் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம் என்றும் பலமுறை தெரிவித்து வந்திருக்கின்றோம். அதற்கிசைந்த வண்ணமாக தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் அடிக்கடி குட்டிக்கரணம்போட்டு வருவதையும்பகிஷ்காரத்திற்கு புது புது வியாக்கியானங்கள் சொல்லி வருவதையும் அவ்வப்போது தெரிவித்துவந்திருக்கின்றோம். திரு சீனிவாசய்யங்கார் தமது திட்டத்தை தூக்கிக்கொண்டு சீமைக்கு சென்றிருப்பதைப் பற்றியும் தெரிவித்திருக்கின்றோம் இப்போது பார்ப்பனர்கள்பார்ப்பன சமூகத்தின் பேராலும் வருணாசிரம தர்ம சபையின் பேராலும் கமிஷனுடன் ஒத்துழைக்கும் விதமாக தங்கள் திட்டங்களை தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். கமிஷனிடம் சாட்சி சொல்லவும் தயாராயிருக்கிறார்கள். எனவே பகிஷ்கார உபதேசத்தை இந்தப் பார்ப்பனர்களும் அவர்களது தாசர்களும் இனி யாருக்கு உபதேசம் செய்கின்றார்கள் என்பதை பொதுஜனங்களே யோசித்துக்கொள்ளவேண்டுகின்றோம். அன்றியும் இப்பார்ப்பனர்களையும் அவர்களது அடிமைகளையும் நம்பிமோசம் போகாமல் ஒவ்வொரு சமூகத்தாரும் தங்கள் தங்கள் குறைகளை அவசியம் கமீஷனுக்கு தெரிவிக்கவேண்டும் என்பதாகவும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

---

## தொழிலாளர் துயரம்.

திரு கண்ணப்பர் அவர்கள் நாகப்பட்டணம் பொன்மலை தொழிலாளர்கள் துயரத்தைப்பற்றியும் இரயில்வேக்காரர்களின் கொடுமையைப் பற்றியும் எடுத்துச்சொல்ல 2 தேதி காலை உதகமண்டலத்துக்கு சென்று நிர்வாக சபை மெம்பர் ஜனாப டாக்டர் உசுமான் அவர்களைக்கண்டு அரை மணி நேரம் பேசினார்கள். மெம்பர் அவர்கள் இவ்விஷயம் தமது அதிகாரத்திற்குள் அடங்கியதல்லவாயினும் தம்மால் கூடியதை செய்யத்தயாராயிருப்பதாக வாக்களித்தார் என்று தெரியவருகிறது.

---

## சாக்கோட்டையில் பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்.

விபவ வருஷம் ஆனி மாதம் 7-ந் தேதி 20-6-28 ல் புதன்கிழமை இறந்த ஸ்ரீமான் அய்யாருமானி சுத்தியார் யென்னும் மீருசு சீமான் அ. மருதமுத்துமானிசுத்தியார் தங்கையான சௌபாக்கியவதி தனலெக்ஷிமி அம்மாளுக்கும் திருவிடமருதூர் சாமிநாத நாசிங்கி தேவர் குமாரர் ஸ்ரீமான் சிங்கார நாசிங்கி தேவருக்கும் சாககோட்டை ருஜாபாயை தெருவில் பெண்வீட்டில் பார்ப்பனீயம் அற்ற திருமணம் மிகச்சிறப்புடன் நடைபெற்றது. அது காலை பல பெரியோர்கள் வந்திருந்து மணமக்களை ஆசிர்வதித்துச் சென்றனர்.

## "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் எழுதும் ஆவலாதிகளில் சந்தா நெம்பரைக்குறித்து எழுதக் கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரை சந்தா நெம்பர் என்று நினைத்து அந்நெம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். சந்தா நெம்பர் என்பது சந்தாதாரரின் விலாசத்துடன் காணப்படும் நெம்பரேயாதலால் அந்நெம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்பட மாட்டாது.

சந்தாரர்கள் தங்கள் சந்தாகாலாவதியடைவதற்கு முன் அடுத்த வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்றுஎழுதாதவரை அடுத்த வருஷத்திற்கும் பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக் கொண்டதாகவேவைத்துக் கொண்டு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பப்பட்டதாக ஏற்பட்ட வி. பி. யை கவுரவிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்,

மானேஜர், "குடி அரசு."

### ஓர் சந்தேகம்.

ஸ்ரீ சீதை இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிள்ளையென்று அநேகர் வற்புறுத்துகின்றார்கள், தவிரவும் இது சுப்பிரமண்ய பாராக்கிரமத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது: ஆதலால் எப்படி எந்த ஜென்மத்தில் அச்சீதை பிறந்தாள்? 'படைச்சால்' என்ற பெயர் எப்படி வாய்த்தது அதன் சரியான அர்த்தமென்ன? தயவுசெய்து இவ்வினாக்களுக்கு விடைதரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கா. லெ. காளிமுத்து, பினாங்கு.

## அநுதாபம்.

கும்பகோணத்தில் சுயமரியாதை இயக்கத்தில் மிக்க பற்றுள்ளவர்களில் ஒருவரும், தன்வந்திரும் சோழிய வேளாள மஹாஜன சங்கத்தின் வைஸ் பிரசிடெண்டும், கைத்தொழில் கம்பெனியின் டைரக்டர்களில் ஒருவருமான அ. பக்கிரியா பிள்ளை அவர்கள் 16 6-28 சனிக்கிழமை காலம் சென்றுவிட்டார். அன்னவர் மரணத்தைக் குறித்து அன்று நமது கைத்தொழில் கம்பெனி லிமிடெட் மூடப்பட்டது. ௸யாரின் மரணத்தைக் குறித்து மிகுந்த துயரமடைவதுடன் அன்னாருடைய குடும்பத்தினருக்கு நமது அநுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## கொளம்பு தென் இந்திய ஆதிதிராவிட மகாஜன சபை.

இச்சபையின் ஆறுவது ஆண்டு விழா ஸ்ரீ ராவ் பகதூர் எம். சி. இராஜா (எம். எல். ஏ.) அவர்களின் தலைமையின் கீழ் பப்ளிக் ஹாலில் 24—6—28-ல் பகல் ஒரு மணிமுதல் நடைபெறும், அவ்வமயம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி சகஜானந்தம் எம். எல். ஸி, அவர்லால் "நமது கடமை என்ன" என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

# இந்து மதம்.

இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும் அது பார்ப்பனர்கள் தங்கள் உயர்வுக்கும் வயிற்றுப்பிழைக்குமாக மூடர்களுக்கு ஏற்றவிதமாக பொய்யையும் புளுகையும் எழுதிவைத்து அதையே மதம் என்றும், வேதம் என்றும், சாஸ்திரம் என்றும் பெயர் வைத்து நம்மில் சில அயோக்கியர்களையும் அறிவிலிகளையும் இழிதன்மையால் சுவாதீனம் செய்து அவர்களைக்கொண்டே அதைப் பிரசாரமும் செய்விக்கச்செய்து, அதையே கலையாகவும், கலியாகவும் செய்வித்து விட்டார்கள் என்றும், அதனால் இப்போது அவைகள் எங்குபார்த்தாலும் வயிற்றுப் பிழைப்புக் காரர்களுக்கும், சோம்பேறிகளுக்கும், சுயநலக் காரர்களுக்கும் தொழிலாகவும் லாபமாகவும் ஏற்பட்டு விட்டதானென்றும் இதன் பலனாக நாட்டில் உள்ள மக்கள் பெரும்பாலும் அறிவிழந்து, மானமிழந்து, [illegible] யற்று வாழும்படியாகவும் ஏற்பட்டுவிட்டது என்றும் பலதடவை எழுதியிருக்கிறோம்.

அப்படியிருந்தும் இம்மாதிரி இந்துமதத்தைப்பற்றி வக்காலத்து வாங்கிப் பேசும் எந்த யோக்கியனோ அல்லது அயோக்கியனோ- இந்து மதம் என்றால் என்ன? அதன் தலைவர் யார்? அதன் ஆதாரம் எது? அது எப்போது ஏற்பட்டது? —என்பன போன்றவைகளை இன்றுவரை வெளியிட வந்தவர்கள் அல்ல. இந்து மதம்போச்சு! இந்து மதம்போச்சு!! என்று மாயாஜாலம் செய்யும் அறிவிலிகள் இதுவரை மற்ற மதங்கள் என்பவைகளுக்கு பொருள் சொல்லப்படுவதுபோல இந்து மதம் என்பதற்கு பொருள் என்ன? என்பதை சொல்லவந்தவர்களுமல்ல. அல்லது இந்துமதம் என்கின்ற வார்த்தையாவது எந்த "வேதத்திலோ" "சாஸ்திரத்திலோ" 'புராணத்திலோ' 'கலைகளிலோ' 'கலிகளிலோ' இருப்பதாகவாவது காட்ட முன் வந்தவர்களுமல்ல. இந்த நிலையில் இருந்து கொண்டு மக்களின் அறிவீனத்தையும் மூடபக்தியையும் தங்களுக்கு ஆதாரவாய் வைத்துக்கொண்டு அயோக்கியர்களும், அறிவிலிகளும், சோம்பேறிகளும் தங்களுக்கு அனுகூலமாக தொட்டதற்கெல்லாம் இந்துமதம் போச்சு! இந்து மதம் போச்சு!! [illegible] சொல்லி மக்களை ஏய்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இதனால் மக்கள் வாழ்வும் அவர்களது பொருளும், அறிவும், நேரமும் எவ்வளவு வீணாகி வருகின்றது என்பதை கவனித்தால் இப்போலிமதத்தால் நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள கெடுதி எவ்வளவு என்பது விளங்காமல் போகாது. தென் நாட்டில் மாத்திரம் இந்துமத தேவாலயங்கள் என்பதின் பேரால், உற்சவங்கள் என்பதின் பேரால், மடங்கள் என்பதின் பேரால் அதை மதமாகக் கொண்டிருக்கும் மக்களின் பணம் வருஷத்தில் சுமார் 10 கோடி ரூபாய்வரை வீணாகின்றதை இந்து மதத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசும் யாராவது உணர்ந்தார்களா என்று கேட்கின்றோம். ஒவ்வொரு கோயிலை எடுத்துக்கொண்டால் 4-லட்சம், 5-லட்சம், 10-லட்சம் 20-லட்சம், ரூபாய் வரும்படி உள்ளவைகளாக இருக்கின்ற விபரம் யாவரும் அறிந்ததே. அந்த மதத்தைச்சேர்ந்த மக்களின் யோக்கியதையை எடுத்துக்கொண்டால் ஆண்களில் 100-க்கு 93 பேரும் பெண்களில் 100-க்கு 99 பேரும் கையெழுத்துக் கூட போடத்தெரியாத அவ்வளவு தற்குறிகளாய் இருக்கின்றார்கள் என்பதும் யாவருக்கும் தெரிந்ததே. இம்மாதிரி இந்நாட்டு ஏழை மக்களின் கஷ்டப்பட்டு சம்பாதித்த செல்வம் வருடா வருடம் 10 கோடிக்கணக்காக வீணாவதும் 100-க்கு 99 பேர் படிக்காத தற்குறிகளாக இருப்பதும் அர்த்தமற்ற-கொள்கையற்ற-இந்து மதத்தினாலா அல்லவா என்று கேட்கின்றோம். இந்து மதத்திற்கு வக்காலத்து பேசும் யோக்கியர்கள் யாராவது சமாதானம் சொல்லுவார்களா? என்று கேட்கின்றோம். ராமனைக் குற்றம் சொன்னதினாலும் தங்களுடைய மதமோ, தெய்வமோ, மானமோ குற்றம் சொல்லப்படுவதாகக் கருதுபவர்கள் அக்குற்றங்கள் எங்கிருந்து உண்டாக்கப்பட்டன என்பதை உணர்ந்தார்களா என்றுதான் கேட்கின்றோம். யோக்கியமும் ஆண்மையும் சுத்த ரத்த ஓட்டமும் உள்ளவர்களானால் அக்குற்றங்கள் உண்மையா அல்லவா என்பதையும் இந்துமதத்தைச்சேர்ந்ததென்று சொல்லப்படும் ஆதாரங்களில் இந்து மதத்தைச் சேர்ந்த கடவுள்கள் என்று சொல்லப்படுபவர்களைப் பற்றி காணுவதுதானா அல்லவா? என்பதையும் வெளியாக்கிவிவகாரம் தொடங்குவார்கள், அப்படிக்கில்லாமல் போக்கிரித்தனமாய் அன்னியர்கள்மீதில் குற்றம் சுமத்துவது யோக்கியப் பொறுப்புள்ளவர்கள் செய்கையாகுமா என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும், நாமும் நமது பத்திரிகையும் நாஸ்திகப்பிரசாரம் செய்கின்றதாக பல அயோக்கியர்கள் எழுதியும்உளறியும்திரிகின்றார்கள். இதை கவனிக்கும் போது நாம் கடிந்து சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏனெனில், நாம் நாஸ்திகப்பிரசாரம் செய்வதாக எழுதுகிறவர்களும் குரைக்கின்றவர்களும் நாஸ்திகம் என்றால் என்ன என்பதைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட கெடுதி என்ன என்பதைப்பற்றியும் சொல்ல முன் வந்து பிறகு அக்குற்றத்தை நம்மீது சுமத்தினால் அதை மனிதத் தன்மையாகக் கொள்ளலாம். அப்படிக்கின்றி நாஸ்திகம் இன்னதென்றே அறிவிக்காமல், மூட ஜனங்களுக்கு நாஸ்திகம் என்கின்ற வார்த்தையில் ஒரு வித வெறுப்பு இருப்பதாக உணர்ந்து, அதை உபயோகித்துக் கொள்வதன் மூலம் நம்மீது அம்மக்களுக்கு ஆவேஷம் உண்டாகட்டும் என்கின்ற அயோக்கியத்தனமான எண்ணத்துடன் பலமடையர்கள் அடிக்கடி எழுதினால் யார் தான் சும்மா இருந்து கொண்டிருக்க முடியும் என்று தான் கேட்கின்றோம்.

நாம் ஏதோ இவ்விஷயத்தில் சற்று கடினமான பதம் உபயோகிப்பதாக நம் வாசகர்கள் கருதலாம். என் செய்வது? நிவர்த்தி இல்லாதலால் உபயோகித்தே தீரவேண்டியதாயிற்று. என்பதை நமது வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஏனெனில் இதைப்பற்றி பல தடவைகளில் நாம் சமாதானம் எழுதி இருக்கின்றோம். அவை கொஞ்சமும் அவ்விலங்கினங்களுக்குபடும்படியாகச் செய்ய முடியவில்லை. மறுபடியும் நாஸ்திகம் என்றும் சீதையைத்திட்டினான் என்றும் மற்றதைத் திட்டினான் என்றுமே எழுதியும் பேசியும் வருகிறார்கள். ஆனதால் இவர்களின் உண்மை யோக்கியதையை வெளியிட்டே தீர வேண்டியதாய்விட்டதே ஒழிய வேறில்லை.

இனிமேலாவது இந்து மதத்திற்கோ மற்றும் எதற்கோ வக்காலத்துப்பேச வருகிறவர்கள் மக்களின் அறியாமையைத் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக் கொள்ளாமல் நாணயமான முறையில் வக்காலத்து வாங்கிப்பேச வரட்டும் என்றே எதிர் பார்க்கிறோம். அன்றியும் நாஸ்திகம் என்று பேச வருபவர்களும் அதுபோலவே எது நாஸ்திகம் என்பதை எடுத்துக் காட்டி வக்காலத்து பேச முன் வரட்டும் என்றே எதிர் பார்க்கின்றோம். அதை விட்டு விட்டு இம்மாதிரி அயோக்கியத்தனமான வழியில் பிரவேசிப்பது மிகுதியும் ஈனத்தனம் என்றே சொல்லுவோம். இப்படி எத்தனை பேர் புறப்பட்டாலும் நாம் கலங்கப் போவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இப்படித்தான் "ஜஸ்டிஸ்" கக்ஷி என்பதையும் "திராவிடன்" என்பதையும் ஒருகாலத்தில் மக்களின் அறியாமையை உபயோகித்துக்கொண்டு பல அயோக்கியர்கள், பொதுமக்கள் அவற்றின் மீது வெறுப்படையும் செய்து, அதனால் வயிறு வளர்த்து வந்தார்கள். ஆனால் அது எதற்கும் அஞ்சாமல் உறுதியுடன் நின்று உழைத்து வந்ததின் பயனாக இன்று மக்கள் உண்மை உணரும்படி செய்து புரட்டர்களின் யோக்கியதையையும் வெளியாக்கி அவர்களை பெல்லாம்மூலையில் உட்கார வைத்து விட்டது என்பதையாரே மறுக்கவல்லவர்? எனவேஒருகாலத்தில் பாமர மக்கள் ஏமாற்றப்பட்டாலும் ஒரு காலத்தில் உண்மை அறிந்தே தீருவார்கள் என்பது நமது உறுதி.

'திராவிடன்'

---

## சத்திரப்பட்டி
## சாலியர் அபிவிருத்தி வாலிபர் சங்கம்.

சத்திரப்பட்டி சாலியர் அபிவிருத்தி வாலிபர் சங்கத்தின் ஆதரவில் காளது ஜூன் மீ 15 தேதி மாலை 7-30 மணிக்கு ஒரு பொது கூட்டம் நடந்தது. இவ்வூர் பெரிய தனவந்தரும், மிட்டாதாரும் பிரபல ஜவுளி நூல் வியாபாரியுமான திருவாளர் கா. ம. மு. நி, பழனியாண்டி தாசனூர் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு அ. ஆறுமுகப்பெருமாள் அவர்களால் 'நமது கல்வி, நாகரீகம், கைத்தொழில்' என்னும் விஷயம் மிக திறமையுடனும் தெளிவுடனும் உபந்யாசிக்கப்பட்டது. இரண்டாவதாக திரு த. க. முத்து அவர்கள் 'ஜீவகாருண்யம்' என்பதைப் மிக உற்சாகத்துடன் பிரசங்கித்தார். அதன் மேல் தலைவர் தமது முடிவுரையில் சங்கத்தின் சேவையைப் பாராட்டி ஆசி கூறினர். கடைசியாக சந்தனம் பூ தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு கூட்டம் எழுந்தது.

சுயமரியாதை ஓங்க!

மா. உ. ஆறுமுகம், காரியதரிசி.

அருப்புக்கோட்டை.

'சுகாதார வார சுயமரியாதை' கேசில் சுயமரியாதையின் சார்பாய் ஆஜரான

# வக்கீல்களுக்கு வாழ்த்து.

சென்ற 4 மாத காலமாய் அருப்புக்கோட்டையில் சுயமரியாதைவாலிபர்களின் மீது வஞ்சக பார்ப்பன வக்கீல் உத்தியோகஸ்தர் முதலியவர்களால் கேஸ் தொடரப்பட்டு நடந்து வந்தது. 6—6—28ல் அக்கேஸ் பிராசிகியூஷன் தரப்பில் ருஜுப்பிக்க ருசுவில்லை என்று டிபன்ஸ் அவனியில் தள்ளப்பட்டதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

பொய் ஜோடிப்பான இக்கேஸ் கட்டப்பட்டவாறே தூங்கிப்போன தற்குகாரணம், நம்பால் அன்புகொண்டு மெய் வருத்தம்பாராமல் பசி நோக்காமல் கண்துஞ்சாமல் யாதொரு கைம்மாறும் கருதாது குறித்தவாய்தாவிற்கெல்லாம் தவறாது பார்ப்பனரல்லாதார்மானத்தைக் காப்பான்வேண்டி ஆஜரான நம் சமூக வக்கீல்களின் திறமையும் சேவையும் தான் என்பதில் ஐயமில்லை. மேக்காசு ஆஜரான வக்கீல்களான கனம் டி. முத்துதிருமேனியாபிள்ளை பி. ஏ. பி. எல். அவர்களிடமும் கனம் டி. நாராயணசாமிபிள்ளை பி. ஏ. பி. எல். அவர்களிடமும் விஷயத்தை தெரிவித்தபோது அவர்கள் "திருக்கண்ணப்பருக்காகவல்ல, அல்லது திரு நாயக்கருக்காகவும் அல்ல, ஆனால் இந்நியாயமான இயக்கத்தில் எமக்குள்ள பற்றுக்கும் நம்பிக்கைக்குமாக இனமாக ஆஜராகி உழைக்கத் தயாராயிருக்கிறோம்" என்று சொல்லி அவ்வாறே அருப்பாடு பட்டார்கள். ஆகையால் பிரதிவாதிகளும் தேவாங்கர்குலமுன்னேற்ற சபையாரும் இப்பெரியாருக்குள்ளறைக்கும் கடமைப்பட்டவராய் தங்கள் நன்றியறிதலை செலுத்துகிறார்கள்.

கனம் டி. முத்துதிருமேனியா பிள்ளையவர்கள் தங்களுக்கு வரும்படி கிடைக்கக்கூடிய அநேக கேஸ்களிருந்தும் பார்ப்பனரல்லாதாரின்மானத்தை காப்பாற்றவும் பிரதிவாதிகளுக்கு 'அஞ்சேல்' எனக்கொடுத்த அபயாஸ்தத்திற்காகவும் ஒருவாய்தாவுக்காகவது தவறாது ஆஜராகி வெற்றியுற நடாத்தி சுயமரியாதைக்கு வெற்றிக்கொடி நாட்டிய தற்காகவும் பிரதிவாதிகளும் தேவாங்ககுலமுன்னேற்றசபையாரும் அவரை மனமொழிகளால்வாழ்த்துவதோடு மற்ற சுயமரியாதையுள்ள சகல பார்ப்பனரல்லாதாரும் அவருக்கு நன்றிபாராட்டுகிறார்கள்.

இடை இடையே ஆஜராகி ஊக்கங்காட்டி வந்த வக்கீல்கள் திரு கந்தசாமி முதலியார் திரு ஞானதேசிகம் பிள்ளை திரு சாக்கோ திரு அழகப்பபிள்ளை திரு ராமச்சந்திரன் சேர்வை முதலிய கனவான்களுக்கும் மற்றும் இக்கேஸ் சம்பந்தமாய் உதவி செய்த பரோபகாரிகளுக்கும் பிரதிவாதிகள்மனப்பூர்வமான நன்றி செலுத்துகிறார்கள். இக்கனவான்களெல்லாம் நீடூழி வாழ்ந்து நம் இயக்கத்தை வலுப்பெறச் செய்யுமாறு எல்லாம் வல்ல ஈசன் துணை புரிவாராக.

க. மீ. சோமசுந்தரஞ் செட்டியார்
அருப்புக்கோட்டை.

## திருச்சி சுயமரியாதை கதர் பண்டகசாலை பங்குக்காரர்களின் கூட்டம்.

காரியதரிசி எழுதுவது.

நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டபடி மாலை 5 மணிக்கு ஷை கூட்டம் 'சிவாஜி' நிலையத்தில் உறையூர் பெரு நிலக்கிழவர், நா. வேணுகோபாலசாமி அவர்கள் தலைமையில் கூடிற்று, பல பங்குக்காரர்கள் கூட்டத்தில்கலந்து கொண்டார்கள். அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1 வது தீர்மானம்.

திருவாளர்கள்

1 திருச்சி தி. ச. அ. வேணுகோபால்நாயுடு அவர்கள் தலைவரும் பொருளாளரும்,

2 உறையூர் ச. ம. சி. பரமசிவம் காரியதரிசியும் மானேஜரும்,

3. திருச்சி கி. பெ. விசுவநாதபிள்ளை கணக்காளர் (ஆடிட்டர்)

4 ஈரோடு ஈ. வெ. இராமசாமி நாயக்கர் 5 உறையூர் நா. வேணுகோபாலசாமி பிள்ளை 6 உறையூர் மே. க. ... பிள்ளை 7 பூவாளூர் நா. சு. மு. செல்வகணபதியார் 8 பூவாளூர் அ. பொன்னம்பலனார் 9 திருச்சி தி. பா. வேதாசலம் வக்கீல் 10 திருச்சி என். ... பெருமாள்நாயுடு 11 பி. ஆர். நாராயணசாமி செட்டியார் திருச்சி 12 மணவை ரெ. திருமலைசாமி 13 திருச்சி அ. இராவணதாசர்

ஆகிய இப்பதின் மூவரும் நிறைவேற்றக்கழக உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

2 வது தீர்மானம்.

இப்பொழுது 200 பங்குகளாக இருப்பதை 400 பங்குகளாக உயர்த்தி (பங்கு ஒன்றுக்கு ரூபாய் பத்து) இது வரையில் சேர்ந்திருக்கும் பங்குகள் போக பாக்கி பங்குதாரர்களை சேர்ப்பிக்கும்படிக்கும் பங்குத்தொகைகளை வசூல் செய்து தலைவராகிய பொக்கிஷதார் பெயருக்கு நம்பிக்கையுள்ள உண்டியல் கடையில் நடப்பு கணக்கு ஏற்படுத்தி அதில் போட்டு வைக்கும்படி இக்கூட்டம் முடிவு செய்தது.

3 வது தீர்மானம்.

பண்டகசாலைக்கு வேண்டிய விதிகளை தயாரித்து அடுத்த கூட்டத்தில் கொண்டுவரும்படி கீழ் கண்டவர்களை ஒரு கமிட்டியாய் நியமனம் செய்கிறது,

திருவாளர்கள் 1 தலைவர், 2 காரியதரிசி, 3 மணவை ரெ. திருமலைசாமி செட்டியார்.

நா. வேணுகோபாலசாமி பிள்ளை, தலைவர்.
17-6-28.

## பார்ப்பனீயம் ஒழிந்த திதி

உடையார்பாளையம் தாலூகா தாதம்பேட்டை பழூரில் திரு சுப்பரூப செட்டியார்குமாரர் திருரெத்தினம்செட்டியாரின் திதியை 17 தேதியில் நடக்க வேண்டியதை புரோகிதர் தம்சௌகர்யத்தைஉத்தேசித்து 18-5-28என்று சொல்லி விட்டுபோய்விட்டார். நான் ஷை பார்ப்பானின் அயோக்கியத்தனத்தை வெளிப்படுத்தி பிராமணனையும் புரோகிதத்தையும் ஒழித்து ஏழை சுற்றத்தாரோடு உண்டி அருந்தச் செய்தேன்.

... சிங்காரம்.

7ம்பக்கத் தொடர்ச்சி.

தல்ல. நியாயத்தாலும் சுயேச்சையாலும் அவர்கள் பணக்காரர்களை வெல்லுவார்கள் நமதுதேசத்தில் குற்றவாளிகள் எனப்பட்ட ஒரு வகுப்பார் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் இருக்க வேண்டிய நிலையில் இருக்க வேண்டும் என்று நான் சொல்லியதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குற்றமும் அவசியத்தால் ஏற்பட்டது; ஒவ்வொரு கொடூரங்களும் அவசியமான சந்தர்ப்பங்களில் தான் நடக்கின்றன: குற்றம் குறைய வேண்டுமானால் நிலைமை மாறவேண்டும். வறுமையே குற்றத்தை உண்டு பண்ணுகிறது. வறுமையும், கசிதையும், கவலைதலும், துரதிர்ஷ்டமும் மனிதனுள் இருக்கும் மிருக புத்தியை தூண்டி விடுகிறது. அவன் படிப்படியாக சட்டத்துக்கு விரோதமாக நடந்து முடிவில் குற்றவாளியாகின்றான். நீ அந்த குற்றவாளியை என்ன செய்வாய் நீ தண்டிப்பாய். சுயபோகமுள்ள ஒருவனை ஏன் தண்டிக்கக்கூடாது. இது நியாயமென்று தோன்றுகிறதோ ... காலம் வரும் நீங்கள் குற்றவாளியை சிறைக்கூடத்துக்கு அனுப்புகிறாய்; அவன் சீர் திருத்தப்பட்டானா? இல்லை, முன்னிலும் அவன் கெட்டு விட்டான். நீங்கள் அவனுடைய ஆண்மையை அடக்கப்பார்க்கிறீர்கள். நீங்கள் அவனுக்கு பச்சை குத்தி அடையாளமிடுகின்றீர்கள்; அவனுக்கு விலங்கிடுகின்றீர்கள்; இரவில் அவனை இருட்டில் இருக்கச் செய்கின்றீர்கள். அவனுக்கு வஞ்சம் அதிகமாகிறது. அவன் தன்னை சீர்திருத்திக்கொள்ளக்கூட நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள். சிறையிலிருந்து வெளியே வரும்போது அவன் மிருகம் போலிருக்கிறான். நீங்கள் அவனை குற்றவாளியென்று வெறுக்கிறீர்கள். என்னைப்போல நீங்கள் அவ்வளவு கெட்டவர்களாகவில்லாவிட்டாலும் ஒன்று செய்யுங்கள் நீங்கள் செய்ய விரும்பிய குற்றங்களையெல்லாம் எண்ணிப் பாருங்கள். சந்தர்ப்பம்நேர்ந்திருந்தால் நீங்கள் எவ்வளவு குற்றம் செய்திருப்பீர்கள். ஒருவரும் பார்த்திராவிட்டால் நீங்கள் எவ்வளவு தீங்குகள் செய்திருப்பீர்கள். பிறகு மார்பில் கையை வைத்து குற்றவாளியை வெறுக்கலாமா என்று சொல்லுங்கள். குணசீலர்கள் தாழ்வானவர்களை கூட தண்டிக்கமாட்டார்கள்

...ஜன சமூகத்துக்கு ஒரு மனிதனை தண்டிக்க எவ்வித உரிமையுமில்லை: குற்றங்களைத் தடுப்பதற்காக ஒருவனை தண்டிக்கலாம். குற்றங்களை சீர்திருத்த ஒருவனை தண்டிக்கலாம், நீங்கள் அவனை எவ்வாறு சீர்திருத்துவீர்கள். அன்பிலிருந்து தான் நல்ல குணங்களெல்லாம் தோன்றுகின்றன.

'திராவிடன்'

"செல்வம் ஒரு குற்றமல்ல; பெரும்பான்மையான குணசீலர்கள் ஏழைகளாக இருந்தாலும் வறுமை ஒரு குணமல்ல"

"எவனொருவன் தானும் இன்பமுடன் வாழ்ந்து பிறர் வாழ்க்கையையும் இன்பமானதாகச் செய்கிறானோ அவனே அறிவாளி".

ஸ்ரீ இங்கர்சால்

# தண்டபாணி வைத்தியசாலை.

## (பழைய வள்ளி வைத்தியசாலையே)

(ரூபாய் 2). அமிர்தம். (Rs. 2).

**Amirtham. A Sure Remedy for Piles, Constipation & All Stomach Troubles.**

பிறவிப் பிணியைப் போக்கும் தேவாமிர்தம் போன்றது. உடற் பிணியை ஓட்டும் உறுதியையுடையது.
குடல் வியாதிகளை யெல்லாம் குலைக்கும் குணமுள்ளது. மூல வியாதிகளை யெல்லாம் முறிக்கும் முருகனை யொத்தது.

பழைய சித்த ஆயுர்வேத யூனானி முறைகளையும், புதிய ஆங்கில முறையையும் தழுவி பரம்பரை அநுபோகத்தைக் கொண்டு சிறந்த மூலிகைகளினாலும், உயர்ந்த சத்துக்களினாலும், (போதை, விஷம், ரச சம்பந்தம் சிறிதுமில்லாத முறையில்) தயாரிக்கப்பட்ட இந்த அமிர்தமாகிய லேகியத்தை பத்தியமில்லாமல் தினம் இரு வேளை சாப்பிட்டுவர பித்தம், மபக்கம், பசியின்மை, சோகை, காமாலை, பாண்டு, வயிற்று வலி, குன்மம், அரோசிகம், வெட்டை, பித்த வாய்வு, மார்வலி, மண்டை இடி, ஒற்றைத் தலைவலி, மேகம், வாதம், கீல்வாய்வு, ஒடுவாய்வு, கீல்பிடிப்பு, கீல்வீக்கம், முழங்கால் வாய்வு, சுவாசகாசம், பாரிச வாய்வு, மலபந்தம், மலச்சிக்கல், மூலாதார உஷ்ணம், மூலமுளை, மூலத்தில் ரத்தம் விழுதல் முதலிய இன்னும் நாட்பட்ட அநேக வியாதிகளும் போகும். ஆணும் பெண்ணும் சிறியோர் முதல் பெரியோர் வரையில் சாப்பிட்டு குணமடையலாம்.

குறிப்பு — அதிகமாய் உட[illegible] உபிசர்களும், குமஸ்தாக்களும், மாணவர்களும், இந்த லேகியத்தை உபயோகிப்பதனால் அன்றாடம் மல நிவர்த்தியைக் கிரமமாகப் [illegible] ரமக் தோன்றாமல் சுகமடைந்து தங்கமயமான திடகாத்திர தேகத்தை யடைவர்.

24 நாள் உட[illegible]க்கக் கூடிய அமிர்தம் 1 சேர் டின் ரூ. 2. தபால் சார்ச்சு வேறு.

## அமிர்தரசம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசாயும், தேவர்களுக்கு அமிர்தமாயும், தமிழர்களுக்கினிய அதிரசமாயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், ஆபத்தையகற்றும் அமிர்தரசமாயும் எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம்தான். சகல வியாதிகளையும் வலிகளையும், அமிர்தரசம் ஒன்றே அதம் செய்யக்கூடியது. துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை கால் குடைச்சல்வரையுள்ள எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீர்ணம், வயிற்றுப் போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். இதன் பெருமையை ஒருதரம் உபயோகித்தவர்கள் உள்ளளவும் மறக்கமாட்டார்கள். புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

முக்கிய குறிப்பு:—வேலூர் வள்ளி வைத்தியசாலையை இதுவரை 20 வருட காலமாய் நடத்திவந்து அநேக மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்றவரான பிரபல டாக்டர் எஸ். பி. அவர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்கி தமது சிற்றூராகிய வேலூரை விட்டு சென்னை நகருக்கு வந்து வள்ளி வைத்தியசாலையின் பெயரை தண்டபாணி வைத்தியசாலையென மாற்றி பல பிரபுக்களையும், தனவந்தர்களையும், சித்த ஆயுர்வேத யூனானி ஆங்கில டாக்டர்களையும் துணைவராகக் கொண்டு ஏராளமான பொருட்செலவில் நல்ல முறையில் உயர்ந்த மருந்துகளை திறம்படச்செய்துநயம்படவிற்க முன்வந்திருக்கிறார். நண்பர்களனைவரும் முன்மாதிரியே இன்னும் பல்லோர்களாகச் சேர்ந்து தங்களுக்குற்ற நோய்களை தண்டபாணி வைத்தியசாலையாரிடம் தெரிவித்து மருந்துகளைப் பெற்றுண்டு குணமடைந்து சுகமாய் வாழ்வார்களென்று எதிர்பார்க்கிறோம். இங்ஙனம்: மானேஜர், தண்டபாணி வைத்தியசாலை.

நற்சாக்ஷி:—சென்ற இரண்டு வருஷ காலமாக நான் வள்ளிவைத்தியசாலைக்குச் சென்னை ஏஜண்டாக இருந்துவந்ததினால் ஷை வைத்தியசாலையின் மருந்துகள் நோய்வாய்ப்பட்ட மக்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த பலனைக் கொடுத்துவருவதைக் காண நேர்ந்தது. தவிர நோய் தீர்ந்தவர்களும், நோயாளிகளும் ஷை வைத்தியசாலையின் மருந்துகளை வெகுவாய்ப் புகழ்ந்து கொண்டாடிப் பேசியதையும் நேரில் கேட்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட வள்ளி வைத்தியசாலையை அநுபோகசாலியான டாக்டர் எஸ். பி. அவர்கள் சென்னைக்கு மாற்றி அதற்கு தண்டபாணி வைத்தியசாலையென பெயரிட்டு பல பிரபலஸ்தர்களின் கூட்டுறவைக்கொண்டு நடத்த முன்வந்ததற்காக தமிழுலகம் அவருக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. அவருடைய வைத்தியசாலையின் மருந்துகளை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு அதில் கூறப்பட்டுள்ளபடி குணமில்லையானால் அவரவர்கள் கொடுத்த பணத்தை வாப்பீசு செய்யவேண்டி என்னிடம் ரூபாய் 1000 ஆயிரம் (ரூபாய்) ரொக்க ஜாமீனாக ஷை தண்டபாணி வைத்தியசாலையாரால் கட்டப்பட்டிருக்கிறது. நானும் இம்மாதிரி யோக்கியமும் திறமையும் வாய்ந்த புகழ்பெற்ற அநுபோக வைத்[illegible]சாலைக்கு சோல் ஏஜண்டாக இருக்க ஒருப்பட்டு ஏஜன்சியையும் ஒப்புக்கொண்டிருக்கிறேன். உத்திரவாதம் செய்யப்பட்ட மேற்படி வைத்[illegible]லையிலேயே நண்பர்கள் தங்கள் வியாதிகளுக்கு தக்க மருந்துகளைப் பெற்று சுகமடையும்படி சிபார்சு செய்கின்றேன். குணமில்லா[illegible]ல் அவரவர்கள் பணத்தை வாபீசு செய்ய ரூ. 1000த்தை நான் எப்பொழுதும் தயாராய் கையில் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை அன்பர்கள் உணர்ந்து எச்சரிக்கையாக நல்ல வைத்தியசாலையை நாடிப் போகும்படி கேட்டுக்கொள்கிறேன். என். தண்டபாணி பிள்ளை.

விசேஷ குறிப்பு:—எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட சகல மருந்துகளின் விபரமடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும். (பர்மா, சிலோன் தவிர) கப்பல் மூலமாகப் போகும் நாடுகளுக்கு ரூ. 3 அட்வான்சாக முன்பணம் அனுப்பினால்தான் பாக்கிக்கு வி. பி. மூலம் மருந்துகள் அனுப்பப்படும். வி. பி. இல்லாத நாட்டார் தபால்செலவு ரூ. 2—0—0ம் மருந்து கிரயம் பூராவும் சேர்த்து முன்பணமாக அனுப்புதல் வேண்டும்.

நேரில் வந்தும் டாக்டர்களிடம் நோயை அறிவித்து மருந்துகளைப் பெற்றுப் போகலாம்.

சோல் ஏஜண்டு:- என். தண்டபாணி பிள்ளை,
6/99, பவழக்காரத் தெரு, மதராஸ்.

எல்லா ஊர்களுக்கும் சப் ஏஜண்டுகள் தேவை. நல்ல பலன் உண்டு. தபால்பெட்டி 292, மதராஸ் என்ற விலாசத்திற்கு எழுதவும்.

டாக்டர் எஸ். பி.
**தண்டபாணி கம்பெனி,**
292, சைனாபஜார், மதராஸ்.

# பார்ப்பனீய மோட்ச சாதனம்.

---

கட்டுரை 2.

## விபூதி

விருத்தாசலம் புராணம், விபூதிச்சருக்கம், 14-ம் பாட்டு.—

*"தீருபுனைவார் வினையை நீறுசெய்தலாலே*
*வீறுதனி நாமமது நீறென விளம்பும்*
*தெறுநரகத்துயிர் செலாவகை மருந்தாய்"*
*கூறுடைய தேவிகையில் முன்னிறை*
*கொடுத்தார்."*

இதன் பொருள்:— "திருநீறு தரித்தவர்களுடைய தீவினையை நீறாகச் செய்கிறபடியினாலே, வெற்றியுள்ள அதின் பெயரும் நீறென்று சொல்லப்படும். பொல்லாத நரகத்தில் உயிர்கள் போய் விழாதபடிக்கு ஒரு மருந்தாகத் தனக்கொரு பாகமான பார்வதி கையிலே முன்பு சிவன் கொடுத்தது இந்தத் திருநீறு" என்பதாம்.

கதை:— ஒருகாலத்தில், மகாபாவங்களைச் செய்த ஒருவனுடைய ஆயிசுமுடிவிலே, யமதருமராஜா அவனைக் கொண்டு வந்து நரகத்திலே போடுகிறதற்குத் தூதர்களை அனுப்பினான். அவர்கள் வருகிற சந்தடியைக் கண்டு, அவனுடைய வீட்டுக்கு முன்னே குப்பை மேட்டுச் சாம்பலிலே புரண்டு கிடந்த ஒரு நாய் பயந்தெழுந்து, சாகக்கிடந்த அவன் மார்பிலும் தலையிலும் ஏறிமிதித்துக்கொண்டு போய்விட்டது. அப்பொழுது அந்த நாயின் காலிலே ஒட்டின சாம்பல் அவனுடைய மார்பிலும் நெற்றியிலும் பட்டது. அதைக்கண்டு, யமதூதர்கள் கிட்டப்போகப்பயந்து, விலகி விட்டார்கள். உடனே சிவகணங்கள் வந்து அவனைக் கயிலாயத்திலே கொண்டு போய் வைத்தார்கள்" என்று சிவ புராணக் கதைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

தெளிதல்:—இதை வாசிக்கிற என் ஜென்மதேச வாசிகளாகிய கனதனவான்களும் கற்றோரும் கல்லாதோருமாகிய அன்பர்களே! வெந்து சாம்பலாய்ப் போன சாணத்திற்கு உண்டாயிருக்கிற மகத்துவம் எத்தனை? சிவனும் சக்தியும் ஆத்ம வருக்கங்களின் பாவங்களை தீர அதைத் தரித்துக் கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறதே. இப்படிக்கொத்த உபதேசத்தை நம்புகிறவர்கள் தங்கள் மனதின்படி சகல பாவங்களையும் செய்து, அன்றன்று கொஞ்சம் நீற்றை (சாம்பலை)பூசிக் கொண்டால், தாங்கள் அன்றன்று செய்கிற பாவங்களும் தொலைந்து போம் என்றெண்ணுவார்களோ?

அப்படியே தாங்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் நீறு பூசாமல் விட்டு விட்டாலும், தாங்கள் சாகும்பொழுது கொஞ்சம் நீற்றைப் பூசிக் கொண்டால் போதுமல்லவா? அப்படி இல்லாவிட்டாலும், தங்கள் உறவின் முறையார் தங்களைத் தகனிக்கக் கொண்டு போகிற பொழுது, எப்படியும் தங்கள் நெற்றியிலே கொஞ்சம் நீறு பூசி எடுத்துப் போவார்கள். அதனாலேயாவது கயிலாயம் சேரலாம் என்று கவலையற்று பாவம் செய்து கொண்டிருக்க மாட்டார்களா?

இதெல்லாம் வீணென்று நமது முன்னோர்களில் அனேகர் சொல்லி எச்சரித்துமிருக்கிறார்கள். அவைகளில் சிலவற்றை யிதனடியில் குறிப்பிடுகிறோம்.

சிவவாக்கியர்:—

"இருக்கு நாலு வேதமும் எழுத்தறவே
யோதினும்
பெருக்கநீறுபூசினும்பிதற்றினும்
பிரானிரான்
உருக்கி நெஞ்சை உட்கலந்து
உண்மை கூற வல்லீரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து
கூடலாகுமே" என்கிறார்.

பட்டணத்தார்:—

"நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீ மனமே.
மாற்றிப்பிறக்க வகை யறிந்தாயில் மறை
முடியில்
வற்றிக்கிடக்கும் எழுகோடிமந்திரம்
எதுக்கடா
ஆற்றிற் கிடந்து துறை தெரியாமல்
அலைகின்றையே." என்கிறார்.

நெஞ்சறி விளக்கம்:—

"வேடத்தைத் தரித்தாலென்னவெண்
பொடி யணிந்தாலென்ன,
நாடொத்து வாழ்ந்தா லென்ன நதிசலங்
கண்டாலென்ன..." என்கிறது.

கவனிப்பு:- "நீறு பூசிக் கொண்டால் எல்லாப்பாவமும் போய் முத்தியடைவாய்" என்கிற உபதேசம் கடவுளை லஞ்சப்பிரியனாக்குகிறது போலாகிறதல்லவா? எப்படியெனில், ஒரு நியாயாதிகாரி ஒரு கொலைபாதகனை நோக்கி "அடா! அங்கே கொஞ்சம் சாணியுண்டு; அதைச் சுட்டுப் பொடியாக்கிப் பூசிவா, உன்னை மன்னித்து விடுதலையாக்குவேன்" என்று தீர்ப்புப் பண்ணினால், அதைக் கேட்டவர்கள், அவரைப் பயித்தியம்பிடித்தவன் என்று நிந்திப்பார்களல்லவா? அப்படியே 'விபூதி பூசுதல் பாவத்தைச் சாம்பலாக்குமென்று சிவன் சொன்னார்" என்று சொல்லுகிறவர்கள் சிவனை பயித்தியக்காரனாக்குகிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் சிவனுக்கு எப்படி அஞ்சி பயப்படுவார்கள்? பக்தியாய் இருப்பார்கள்? ஆன்றோர்கள் "பரிசுத்தம் (ஒழுக்கம்) இல்லாதவன் கடவுளை தரிசிக்க மாட்டான்" என்கிற படியால், விபூதி பூசுதலுக்கும் பரிசுத்தத்திற்கும் சம்பந்தம் என்னயிருக்கிறது? ஒன்றுமில்லை. விபூதிபூசுதல் பரிசுத்தத்திற்கு காரணம் என்று எவ்வளவேனும் நினைக்கலாகாது, அப்படியேகாரணமாயிருந்தால், திருடன் ஒரு கையினாலே திருடி மறு கையினாலே விபூதி பூசி, புண்ணியசாலியாயிருப்பான் அல்லவோ? ஆகையால் இப்படிப்பட்ட பொய்யுபதேசத்தை விட்டு விட்டு, பரிசுத்தமாகிறது எப்படி என்று கவனியுங்கள்.

பிரபு லிங்கலீலை:—

"எண்ணாரும் அன்புளத்தில்லையேயெனில்
பண்ணிய பூசனை பயன் தராதரோ"
என்றெச்சரிக்கிறது.

5-ம் பக்கத் தொடர்ச்சி.

"உளைவிரி புரவித்தேரு தாசித் தென்றெனும்
வளைமுரல் தானையான் மருங்கு போதப்போய்
இளையவன் றன்னொடு மேழு நாளிடை
நளிர் புனற்கேகய நாடு நண்ணினான்."

இவ்விடத்தில் கம்பர் யுதாசித்ததைப்பற்றியவிவரமறியாமல் மயங்கியிருக்க வேண்டும்; அல்லது வால்மீகத்தில் கூறியிருக்கும் விவகாரம் இடைச்செருகலாயிருக்கவேண்டும். ஆனால் இடைச்செருகல் எனபதற்குத்தகுந்த ஆதாரமல்லை. ஆதலின் கம்பர் மேலதே தவறு.

பரதன் தன்னுடன் சத்துருக்னனைமட்டும் அழைத்தேகியனுவன். அவ்விருவரும் தம்மனைவியரை அயோத்தியிலேயேவிட்டேகினர். இவ்வாறு பரதனை அயோத்தியைவிட்டுப் போகச்சொல்தற்குத் தசரதன் கூறியகாரணம் அவன் பாட்டன் அவனைப் பார்க்க விரும்புகிறானென்று அவன் மாமனான யுதாசித்து வந்து கூறியதே. கேகய மன்னன் பரதனைப்பார்க்க விரும்பியது அவனுடையமணத்தின்முன் அவனுடைய மணச்செதியறிந்தவுடன் அவனுடையபாட்டனுடையகடைமையாவது புதுப்பெண்ணையும் மாப்பிள்ளையையும் அயோத்தியில் வந்து பார்ப்பதேயாகும். அல்லது பெண்ணையும் மாப்பிள்ளையையுமாக அழைத்துப் போதல் வேண்டும். தசரதனுடைய கடைமையும் மணச்செய்தியை யறிவித்துத் தன்னுடைய [illegible] அயோத்திக்கு வரவழைப்பதேயாகும். [illegible] வந்து காத்திருந்தானேனும் அவன் [illegible] திருப்பியதின் காரணமாகக் காட்டிப் பரதனை கேகய நாட்டிற்கு அனுப்பியது மிகக் கொடிய செயலே. அப்போதுதான் மணமுடிந்து புதுமண இன்பம்நுகர்ந்திருந்த பரதனை வேறுநாட்டிற்கு அனுப்புவதற்குத் தகுந்த காரணம் வேண்டும். பரதன் பிரிந்து போனபின் அயோத்தியில் நடந்த நிகழ்ச்சிகளை வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவைகளை கூறாது விடுத்தார். அதாவது இராமன் குடிகளோடு நெருங்கிப் பழகி அவர்களுக்கு மிகவும் வேண்டியவனாக நடந்து அவர்களுடைய மனத்தை கவர்கிறான். இவ்வாறு பரதனை பிரித்து இராமனைக் குடிகளோடு நெருங்கிப் பழகச்செய்வதே தசரதனுடைய நோக்கம் போலும். அதாவது இளவரசுப்பட்டம் பெறுவதற்குத் தகுந்தவனல்லாத இராமனிடத்தில் மிகுந்த அன்பு கொண்டிருந்த வஞ்சகனாகிய தசரதன் பட்டத்துக்குரியவனான பரதன் அயோத்தியிலிருக்கும்போது இராமனுக்கு பட்டங்கட்ட முடியாதென நன்குணர்ந்து பரதனை நாடுகடத்தி, இராமனை குடிகளோடு பழகி அவர்களுக்கு மிகவும் நல்லவனாக நடக்குமாறு செய்து குடிகளுடைய அன்பைப் பெற்று இராமனுக்கு பட்டங்கட்டவே இவ்வாறு பரதனை வஞ்சித்தான். இவ்விவரமெல்லாம் அயோத்தியாகாண்ட ஆராய்ச்சியில்பரக்க ஆராய்வோம். மக்களிலே பக்கவாதம் செய்யும் இவ்விழிதகைமையனான தசரதனுடைய வஞ்சக இழிகுணந்தானென்னே.? இனிமேற்செல்லுதும்.

---

வாயுசங்கீதை:—

"கருமமா தவம்செபம்சொல்காசறுசமாதி.
ஞானம்புரிபவர் வசமதாகிப் பொருந்திடேம்
புரையொன்றின்றி
திரிவறும் அன்புசெய்வோர்
வசமதாய்ச் சேர்ந்து நிற்போம்"

என்று பகிரங்கமாப்ப் போதிக்கிறது.

ஆதலால் "அன்புள்ளவன் இடத்தில் பரிசுத்தம் இருக்கும், பரிசுத்த முள்ளவனிடத்தில் கடவுளும் இருப்பார், மோட்சமுண்டு" என்பது நிச்சயமாகிறது.

"தூண்டுகோல்"

## தஞ்சை ஜில்லா, பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகா நாடு.

ஜுன் மாதம், 23-24-ல் கூடுவதாக ஏற்பாடாகி இருந்த இம்மகா நாடு, உயர்திரு நாயக்கர் அவர்கள், உடம்பு சுகமில்லாமையை முன்னிட்டு ஓய்வு எடுத்துக்கொண்டு இருப்பதாலும், கண்காக்ஷி சாலைக்கு பொருள் அனுப்புவோரில் பெரும்பாலர் சிறிதுகாலம் மகா நாட்டை ஒத்திவைக்க வேண்டுமென்னவும், அப்படிச் செய்தால் தங்கள் தங்களால் தயாரிக்கப்படும் பொருள்களை, திருத்தமாகச் செய்து தரமுடியுமென்றும் கேட்டுக்கொண்டிருப்பதாலும் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்ற யோஜனை இருந்து வருகிறது, அன்பர்கள் அடுத்த தேதியை எதிர்பார்ப்பார்களாக,

வி. எஸ். இராமன், மகா நாட்டுக் காரியதரிசி,


## அறிக்கை.


எங்களிடம் பிரான்ஸி நல்ல ரகுள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே ... வாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், ... மார்க்குகளும் கைவசமிருக்கிறது. ... ஜவுளி சினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.


## அருப்புக்கோட்டை சன்மார்க்க சங்கம்.

விபவ-ளு ஆனி-ம் 5-தேதி இக்கட்டிழவம யன்று அருப்புக்கோட்டையில் ஷை சன்மார்க்க சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது இச்சங்கத்தின் நோக்கம், மூடநம்பிக்கையையும்மூடக்கொள்கைகளையும் ஒழித்து சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது. திருவாளர்கள் வி. அயோத்தி, தலைவராகவும் வா. து கைலாசம் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.


15 இனம் சாமானுடன் கொடுக்கப்படும்



எங்களின் தாராவீடர் 18 காரட்டு ரோல்ட்டு கோல்டு பாக்கெட் கடியாரம் ஆர்டர் செய்பவர்களுக்கு மேலே கண்ட 15 இனம் சாமான் கொடுக்கப்படும். இனங்களுடன் ரூ. 4—8—0. தீ. பான்ஸி வாட்சு அவுஸ், ஜி. டி. மதராஸ்.


பார்ப்பானுக்குக் கொடுத்தால் தான பரகதி அடைய முடியுமோ?

## சென்னைப் பல்கலைக்கழகத் தேர்தல்

கோயமுத்தூர் ஜில்லா போர்டு உபதலைவரும் இலக்கிழவரும் பிரபல வர்த்தகருமான திருவாளர் எஸ். என். பொன்னையா கவுண்டர் அவர்கள் கோவை ஜில்லா போர்டு அங்கத்தினர்களால் 11-6-28-ல் சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார் மாணவர் பலர்க்கு உபகாரச்சம்பளம் கொடுத்துதவிவரும் பெரியாரும் அறத்துறைச் செல்வருமாகிய திரு கவுண்டர் அவர்கள் எல்லா நலங்களும் பெற்று நீடு வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ஏ. ஆர். சிவானந்தம்.


## அறிவிப்பு.

எமது சோதிடாலயத்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வந்து கொண்டிருப்பதால் அன்னோர்களுக்கு தனித்தனியாக வந்தனம் கூற முடியாமையால் இப்பத்திரிகை வாயலாக எமது அன்பார்ந்தநன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம்;

## எதிர்கால சோதிடம்.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதர், பிதூர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திர ரூபம், பாக்யம், ஜீவனம், தொழில், லாபம், விரையம் ஆக இத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்.
வைத்திக்குப்பம், புதுவை. (பிரஞ்சிந்தியா).



# குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

## "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம நண்பர்கள் எல்லோரையும் வாங்கும்படி தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.

இல்வாழ்வை நல்வாழ்வாக நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

மூன்றும் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலி புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தில் பேரில் "வாஸன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கின்றதாவென்று பார்த்து வாங்குங்கள். எமது விலாசம்:—

## வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபாற் பெட்டி 119, மதறாஸ்.



3-ம் பக்கம் பார்க்க.

தன் பொருளைத் தந்தைக்குக் கொடுத்தால் நூறு பங்கு விஷேடம்; தாய்க்கானல் ஆயிரம் பங்கு விஷேடம்; மகனுக்கானல் முடிவேயில்லாத விஷேடம்; உடன் பிறந்தாருக்குக் கொடுத்தால் என்றும் கெடாது வளரும்'' என்கிறார்.

இன்னும் "வேதியருக்கு மாத்திரமே தானம் கொடுக்கவேண்டுமென்பது விரதமாகக் கொண்டால் எல்லாவிடத்திலும் அது சிறந்ததல்ல. தன்னுடன் பிறந்த பெண்கள், அவர்கள் பிள்ளைகளாகிய மருமக்கள்மார், அம்மான்மார், தந்தையுடன் பிறந்த அத்தைமார், மற்றும் வறியவர்களாகவிருக்கிற தன் சுற்றத்தார் முதலியவருக்கு கொடுத்தால் அதனால் வேதியனுக்குக் கொடுப்பதைவிட கோடி பங்கு அதிகமான பலன் உண்டாகும்'' என்கிறார்.

இவையனைத்தும் ஸ்மிருதி என்னும் இந்து தர்ம சாஸ்திரங்களிலுள்ளவை. இதில் சொல்லியிருக்கும் வேதியனிருந்தாலல்லவோ இந்து தர்மமிருக்கும்; அவன் அனைத்தும் அன்னிய சாகை படிப்பவன். எப்பொழுது அன்னியசாகை படித்தானோ அன்றே வேதியன் என்பதினின்றும் தள்ளப்பட்டான். வைதீக பார்ப்பான் கூடதான் வைதீகம் என்று சொல்லி சம்பாதிக்கும் பணமெல்லாம் தன் பிள்ளை குட்டிகளை அன்னியசாகை படிக்கவே உபயோகப் படுத்தியும் வந்து, உத்தியோகங்களுக்குச் செய்யாத அடிமையெல்லாம் செய்து, இந்து தருமங்களில் எதாவது கெடாமலிருந்தாலல்லவா நாங்கள் போய்க்கெடுக்க வேண்டியதாயிருக்கும்.

இந்து தர்ம சாஸ்திரஸ்மிருதிகளின்படி உத்தம வேதியன் இல்லாதொழிந்தமையால் கேடுகெட்டவனே வேதியன் என்று நடிக்கிறான். அவனுக்குக் கொடுத்துத் தன் குடும்பமும் கெட்டு நாகத்திற்கும் போவதைவிட இந்து தர்ம சாஸ்திரப்படி தன் ஏழைச் சுற்றத்தாருக்குக் கொடுப்பதே விஷேடமென்று சொன்னால் இந்து தர்மத்தை கெடுப்பவர்கள் ஆவோமா? இந்து தர்மத்தைக் காப்பிக்கடை ஒன்று செய்கிறது, கள்ளுக்கடை யழிக்கிறது, கஞ்சாக்கடை ஆதரிக்கிறது; இங்கிலீஷ் நாகரீகம் எங்கு பார்த்தாலும் சூழ்ந்துக்கொண்டது. சூப்பும் முட்டையும் இல்லாமல் டாக்டர்கள் உடம்பு தேராதென்கிறார்கள்; சீமையைப் போல் ஒரு காசு மருந்தை ஒரு ரூபாய்க்கு விற்கப் பழகிவிட்டார்கள். ஞாயக் கோர்ட்டில் வாதிப்பவர்கள் பணம் வாங்கினாலும் பத்தாது என்று சொல்லுகிறார்களே ஒழிய கோர்ட்டுக்குப் போவது வெகுகஷ்டம். இத்தனை பேருக்கும் மத்தியில் அழிக்கும் வேலை எங்களுக்கென்ன விருக்கிறது? ஆனால் இத்தனை கூட்டத்திலிருந்துக்கொண்டு மற்ற ஜன சமூகங்களைத் தாழ்த்துவதில் மட்டும் இந்து தர்மம் அழியாமலிருக்கின்றதே, அந்த இடத்தைத்தான் அழிக்கவேண்டுமென்கிறோம். அவையழிந்தால் உருட்டும் புரட்டும் ஓடிப்போய் சுயராஜ்யம் உடனே வந்துவிடும்.


## மலாய் நாட்டு கள்ளர்கள் சமூகத்திற்கு ஓர் விண்ணப்பம்.

அன்பார்ந்த சகோதரர்களே!

நம் கள்ளர்களெல்லாம், கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தும் ஒற்றுமையடைந்தும், கைத்தொழிலில் தேர்ந்தும், எளிதில் முன்னேற்ற மடைய வேண்டுமெனக்கருதி ஒரு கள்ளர் சங்கம் ஸ்தாபிக்க பெரும் பாடுபட்டுவரும் கனம். கி. எஸ். என். கூத்தையன் ஆல்ம்பிரியரின் எண்ணம் முடியும் வண்ணம் திருவருணிறைந்த திருவாவராசிய கள்ளர்களெல்லாம், உங்கள் தங்களாலியன்ற வரையில் பெருளுதவிசெய்து பாதுகாப்பாளர்களாகவும், அங்கத்தினராகவும் சேரும்படி மன்றாடி கேட்டுக்கொள்கிறோம். க. கா. மருதிமுத்து வாண்டையார். திரு மூலங்கலூர்.


கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறுகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{2} X 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்



சுவாச காச ரோகத்திற்கு

ஆஸ்த்மா சிகிச்சைக்கு அரசனாகிய கபரோக நிவாரணி என்னும்

ஆஸ்த்மா பௌடர்.

கொடிய சுவாசகாச ரோகத்திலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்புவோர் இதை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். கபத்துக்கு இது ஒரு சத்ரு. நிமிஷக் கணத்தில் தொந்திரவை நீக்குகிறது.

வைத்திய சிரோன்மணிகளால் அங்கீகரிக்கப்பட்டது. சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், புண், வலி முதலிய சகல கஷ்டங்களையும் இந்த ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்து கெட்டியான கபத்தை இளகச்செய்து கபத்தை வெளியில் தள்ளி கஷ்டமில்லாமல் எப்பொழுதும்போல் சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், பசிதீபனமுண்டாக்கி ஆவலுடன் அதிக ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரைசெய்யும் படியாயும் செய்கிறது. தவிர, இம்மருந்து சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், நாசியில் நீர்வடிதல், விஷ ஜுரம், திரேகம் மெலிதல், முகம் வெளுத்தல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளுக்கு மிகவும் மேலான மருந்தாயும், நிமிஷக்கணக்கில் அதிக ஆச்சர்யத்துடன் நிவர்த்திசெய்யத் தக்கதாயுமிருக்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு. புரோப்ரைட்டர், பூ. மா. சொக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை, அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)



## கணித சோதிடம்

பரசித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு [illegible] பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி, முதலியார் பேட்டை, புதுச்சேரி.



## பொருள் செய்வகை.

"உங்கள் வியாபாரம் விருத்தியாக வேண்டுமானால் இப்புத்தகத்தை நீங்கள் அவசியம் வாசிக்கவேண்டும். இப்புத்தகத்தில் எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும் உங்களுக்குத் தெரியாத அநேக இரகசியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வருஷத்திற் கொருதடவை சில சாமான்கள் விலையேறுகின்றன. இது உங்களுக்குத் தெரியுமா. இப்புத்தகத்தை வாசித்துப் பாருங்கள். கமிஷன் வியாபாரம், துணிந்து செய்யும் வியாபாரம், ஒப்பந்த வியாபாரம், சரக்குகள் விலை ஏறுவதும் இறங்குவதும் அறியும் விபரம் இன்னும் அநேக இரகசியங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூபாய் ஒன்று.

தேவி ஆஸ்ரமம், திரௌபதை அம்மன் கோவில் வீதி, புதுச்சேரி.



பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவர்!
பழநியில் கீர்த்திவாய்ந்த வைத்திய ஆசிரியர்!!

ஐந்து தலைமுறையாய் அனுபவமுள்ளதும், மஹானின் அனுக்கிரகம் பெற்றதுமான பெரிய முறைகளால் தயாரித்த சிறந்த ஔஷதங்கள் எங்களிடத்தில்தான் கிடைக்கும். கர்ம வியாதிகளைக் கண்டிப்பது எது? ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கின பழநி சி. எம். சாமி.

## குருதாம்பர பஸ்பம் ஒன்று தான்.

இது அபூர்வ சத்தி வாய்ந்தது தீராத நாட்பட்ட திமிர், குஷ்டம், மதமதப்பு, குறைநோய், வீக்கம், பெரு வயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சொரிகள், பத்துகள், தடிப்புகள், கபால நீர் பிளவை, ஆராத குளிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீங்கும் அனுபவத்தில் கைகண்டது.

100-வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50. 50-வேளை ரூ. 25.

ஏழைகளுக்கு பாதி விலை.

நற்சாட்சியை கவனியுங்கள்:—

ஐயா, எனக்கு வயது 35. இரண்டு வருஷகாலமாய் குஷ்ட வியாதி வலது கால் பெருவிரலில் குளிப்புண், குண்டி [illegible] முதுகில் வெள்ளைப்புள்ளிகள், வலது கையிலும் இடது கையிலும் [illegible] மதமதப்பு, சுரணையில்லாதிருத்தல் இவைகளினால் மிகவும் கஷ்டப்பட்டு [illegible] ஆஸ்பத்திரியில் 17 தினங்கள்வரை இருந்தும் இன்னும் அநேக இங்கிலீஷ் மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாமல் தங்கள் மருந்துகளின் குணங்களையும், பிரக்யாதியையும் கேள்விப்பட்டு நேரில் வந்து 50 வேளை குருதாம்பர பஸ்பமும் அதற்கு அனுபானமும் பெற்று சாப்பிட்டதில் குணமாய் இருக்கிறது.

கோவிந்த நாயர், குடுவாயூர், பாலக்காடு தாலூகா.

குருதாம்பர பஸ்பம் தருவித்து 60 வயதுள்ள ஸ்திரீக்கு மேகசீரினால் முழங்கால், பாதம், கணுக்கால் இவைகளில் வீக்கமும், உபத்திரவமுமிருந்து அதற்கு 10-வேளை கொடுத்ததில் பூரண சௌக்கியமாயிற்று.

எஸ். கே. நாராயணசாமி நாயுடு,
எப். டி. தென்னை, காளியாம்பாடி போஸ்டு, வேலூர் தாலூகா.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய அபீஸர்களின் நற்சாட்சிகளையும் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர். **C. மலையப்பசாமி.** நித்தியானந்தவைத்திய சாலை, பழனி

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.



ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.



## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைன்ஸ் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.



டேபில் டைம்பீஸ் இனாம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும்.



இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட். ஜி. டி மதராஸ்



இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம்சித்திரவேலை செய்யப்பட்ட ஸில்வர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன்பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனேஎழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.



முன் விலை ரூ. 14. இப்பொழுதரு 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உயர்தி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.



மலையாளம் மதனகாமேஸ்வரி லேகியம்.

பெயர் பெற்ற சாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபாற் செலவு 8 அணா. காலண்டரும் பிரயாட்லாக் இனாம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி K. A.
போஸ்டு முல்லச்சேரி, தென் மலையாளம்.



சுயமரியாதை அடைய
பார்ப்பனீயம் ஒழிய,
'திராவிடன்' 'குடி அரசு'
பத்திரிகைகளை வாசியுங்கள்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸ மென்னும்

# மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—3—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, ஜுளை போஸ்டு, மதராஸ்,

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

## லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

## வர்த்தகக் கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில் தான் இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் இப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை. நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை




## ஜீவாம்ருதம்.

வைத்யரத்ன பண்டிட் கோபாலாச்சார்லு அவர்களால் சிறந்த மூலிகைகளினின்றும் கண்டு பிடிக்கப்பட்டு கால் நூற்றாண்டுகளாக உலகில் நிலவி வருவது. ஆரோக்கியம், தேஜஸ், வீரியம், பலம் முதலியவைகளைத் தன்னுள்ளடக்கிய ஜீவாம்ருத புட்டி என்பது மிகையா! மெலிந்த தேகிகளுக்கும், நோயாளிகளுக்கும் இது உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்.

இன்றே ஒரு புட்டிக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

விலை ரூ. 3—4—0.

ஆயுர்வேதாஸ்ரமம்.

151 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, தபாற் பெட்டி 287, சென்னை.

## பெண்கள்

ஆவலாய்விரும்பக் கூடியது! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், ஆரஞ்சி, கருப்பு, கெம்பு ஸ்கலர்கள், கெட்டிச்சாயம், கரையிலும் முந்தியிலும் பூவேலைமானமுள்ள நூதனமாகத்தயார் செய்த புடவை. 18 மு. X 48 இஞ்சு புடவை ரூ. 4—8—0. ஷை பூவேலைமானமில்லாதது ரூ. 4—4—0. ஷை உடல் சிகப்பு அல்லது கருப்பு பல மாதிரி புள்ளிகள் போட்ட சுன்னடி புடவை ரூ. 4—8—0. புதிய கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co.
Laxmi Colth Store, MADURA.

## ஆநந்த குணபோதினி.

மூன்றாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் [illegible], எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனையே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றுதான் 5000-சந்தாதார்களுள்ளது. வருட சந்தா ரூ. 1, வெளிநாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## சட்ரஸ லேகியம். (சட்னி)

இவை அநேக விதமான மூலிகைகளினாலும், காபூல் திராக்ஷ ரசத்தினாலும் தயாரிக்கப்பட்டது குணம்:—மலபந்தம், அஜீர்ணம், வாய்வு சேர்வு, வயிற்று வலி முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும். சாப்பிடும் முறை:— சுடுகிற சாதத்தில் அரை தோலம் இந்த லேகியத்தை நெய் போட்டுக் கொண்டு சாப்பிடவும்.

டின் ஒன்றுக்கு கிரயம் ரூ. 0—8—0.

## ரத்தன் மிஸரி அல்வா.

நீரான இந்திரியத்தை கெட்டி செய்யும். தாது விருத்தியாகும்; ஸ்திரீ சம்போகம் சுகங்கொடுக்கும். சொர்பன ஸ்கலிதம், மூத்திரத்தில் பொட்டு பொட்டாய் வீரியம் போகிறது, ஸ்திரியைக் கண்டவுடன் வீரியம் ஸ்கலிதமாய் சம்போகத்தின்பேரில் பிரியம் இல்லாமல் போகிறது, துர் அப்பியாசத்தினால் பும்ஸத்துவம் இல்லாமல் இருக்கிறது ஆகிய அநேக விதமான மேக வியாதிகள் முதலானவைகளைப் போக்கடித்துவிடும்.

கிரயம் டின் ஒன்றுக்கு ரூ. 2—8—0.

மேல்கண்ட மருந்துகள் ஈரோடு, கோயமுத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், கிருஷ்ணகிரி, திருப்பூர், தருமபுரி இந்த இடங்களில் கிடைக்கும்.

ஆஞ்சநேய ஜோதிஷாலயம்,
நகர்த்து பேட்டை,
பெங்களூர் சிட்டி.


**சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.**

ஸ்ரீமதி கண்ணம்மாள் அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.